


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 185 16.02.2026 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 185 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(16–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–4
பிறை: தேய்பிறை
திதி
சதுர்த்தசி இரவு 6.26 வரை
பிறகு அமாவாசை
நட்சத்திரம்:
திருவோணம் இரவு
9.41 வரை பிறகு அவிட்டம்
யோகம்
அமிர்த/சித்தயோகம்
ராகுகாலம்
காலை 7.30 – 9.00 மணி
எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி.
சூலம் – கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 3–4 மணி

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | மகிழ்ச்சி |
| மிதுனம் | ஈகை |
| கடகம் | நலம் |
| சிம்மம் | ஆதரவு |
| கன்னி | உயர்வு |
| துலாம் | ஆக்கம் |
| விருச்சிகம் | தாமதம் |
| தனுசு | ஆதாயம் |
| மகரம் | வரவு |
| கும்பம் | மேன்மை |
| மீனம் | முயற்சி |

# சென்னையில் 'எல்' வடிவ மேம்பாலத்தை திறந்து வைத்தார் முதல்வர் மு. க. ஸ்டாலின்!






சென்னை,பிப்.16:

மத்திய கைலாஷ் சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள 'எல்' வடிவ இருவழிச் சாலை மேம்பாலத்தை முதல்வர் மு. க. ஸ்டாலின் இன்று (பிப். 15) காலை 10 மணியளவில் திறந்து வைத்தார். அப்போது, அமைச்சர்கள் எ. வ வேலு, மா. சுப்பிரமணியன் மற்றும் திமுக தலைவர்கள் பலர் உடனிருந்தனர். அதன்பின், அப்பாலத்தில் சென்று அவர் பார்வையிட்டார்.

ராஜீவ் காந்தி சாலையானது மத்திய கைலாஷ் பகுதியில் சாதார் படேல் சாலையில் இருந்து துவங்குகிறது. இந்த 2 சாலைகளும் சந்திக்கும் இடம் 'டி' வடிவலானது. இச்சாலை சந்திப்பில் வாகனங்கள் சிரமமின்றி கடந்து செல்வதற்கு, சாதார் படேல் சாலையிலிருந்து ராஜீவ் காந்தி சாலைக்கு செல்லும் வாகனங்கள் இம்மேம்பாலத்தைபயன்படுத்தும் வகையில் எல் வடிவில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாலம் இருவழித்தடம் அகலம் கொண்டதாகவும், ஒரு வழி வாகனப் போக்குவரத்து கொண்டதாகவும், 652 மீ. நீளம் கொண்டதாகவும், ரூ.61கோடியில் அமைக்கப்பட்டுள்ளது.

## திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு இனி வள்ளலார் பெயர்

வடலூர் வள்ளலாரின் புகழைப் போற்றும் வகையில், சென்னையில் உள்ள முக்கிய சாலையான திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு வள்ளலார் நெடுஞ்சாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் எக்ஸ் பக்கத்தில் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

வள்ளலாரின் புகழைப் போற்றுவதன் தொடர்ச்சியாக, அயல்நாட்டினரிடமும் வள்ளலாரின் உயரிய கருத்துகளைக் கொண்டு சேர்த்திட, வரும் பிப்ரவரி 15-ஆம் நாள் சென்னை கீழ்ப்பாக்கம் ஏகாம்பரநாதர் பள்ளி வளாகத்தில் அனைத்துலக வள்ளலார் மாநாடு 2026 நடத்தப்படும் என்றும், மேலும், வள்ளலார் நெறியாளர்களின் கோரிக்கையை ஏற்று, திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு வள்ளலார் நெடுஞ்சாலை எனப் பெயர் சூட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்! என்று பதிவிட்டுள்ளார்.

## இந்தியாவின் முதல் நீருக்கடியில் செல்லும் சாலை



புதுடில்லி,பிப்.16:

இந்தியாவின் முதல் நீருக்கடியில் அமையவுள்ள சாலை-ரெயில் சுரங்கப்பாதை திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இது உலகின் 2வது சாலை-ரயில் சுரங்கப்பாதையாக இருக்கும். முதலாமது ஐரோப்பாவில் அமைந்துள்ளது.

இரட்டை வழிகள் கொண்ட இந்த பாதையின் ஒரு பகுதி ரெயில் பாதையாகவும், மற்றொரு பகுதி வாகனங்கள் செல்லும் சாலையாகவும் இருக்கும்.அசாம் மாநிலத்தில் பிரம்மபுத்திரா ஆற்றின் அடியில் 15.79 கி.மீ தூரத்திற்கு ரூ.18,662 கோடி செலவில் இந்த சாலை-ரயில் சுரங்கப்பாதை கட்டப்பட உள்ளது.

இது அசாமில் உள்ள கோப்பூர் மற்றும் நுமாலிகரை இணைக்கும். பயண நேரத்தை சுமார் 6 மணி நேரத்திலிருந்து வெறும் 20 நிமிடங்களாக குறைக்கும்.

முன்னதாக நேற்று அசாம் சென்ற பிரதமர் மோடி, அவசர காலங்களில் விமானங்கள் தரையிறங்கும் சாலையும், பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஆறு வழிச் சாலைப் பாலத்தையும் திறந்து வைத்தது குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தத்தை இந்தியா ஆதரிக்கும்: ஜெய்சங்கர்



சென்னை,பிப்.16:

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தத்தை இந்தியா ஆதரிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனியின் மியூனிக் நகரில் பாதுகாப்பு விவகாரம் தொடர்பான உலக நாடுகளின் மாநாடு வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்ள சென்றுள்ள ஜெய்சங்கர், மாநாட்டின் இடையே ஜி7 அமைப்பு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களை சனிக்கிழமை சந்தித்து பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்த சந்திப்புக்கு பிறகு, எக்ஸ் பக்கத்தில் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில்,'ஜி7 நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களை சந்தித்து பேசியது மகிழ்ச்சி அளிக்கிறது.

ஐ.நா.வின் 'ஐ.நா.80' திட்டத்தை இந்தியா ஆதரிக்கிறது. குறிப்பாக, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஆத்தமுள்ள சீர்திருத்தம் செய்வதை இந்தியா ஆதரிக்கிறது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய 5 நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன. அந்நாடுகளுக்கு வீட்டோ உள்ளிட்ட சிறப்பு அதிகாரங்கள் உள்ளன.

பாதுகாப்பு கவுன்சிலை தற்போதைய உலக சூழலுக்கு ஏற்ப சீர்திருத்தம் செய்ய வேண்டும், அதில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக்க வேண்டும் எனவும் இந்தியா வலியுறுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடு முழுவதும் சிவாலங்களில் மகா சிவராத்திரி வழிபாடு கோலாகலம்



புதுடில்லி,பிப்.16:

மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசி திதியில் அம்பிகை சிவபெருமானை வணங்கியதாக கூறப்படும் நாளில் மகா சிவராத்திரி கொண்டாடப்படுகிறது. பிரளய காலத்தில் ஜீவராசிகள் அழிந்துவிட்ட நிலையில், பரமேஸ்வரனை நினைத்து நான்கு ஜாமங்கள் உமாதேவி பூஜை செய்ததாகவும், இதேபோன்று சிவராத்திரி நாளில் பூஜிப்பவர்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்பது ஐதீகம்.

சிவராத்திரியையொட்டி நாள்முழுவதும் விரதமிருந்து, சிவபுராணம் படிப்பதுடன் விடிய விடிய விழித்திருந்து சிவபெருமானை வழிபடுகின்றனர். மகாசிவராத்திரியையொட்டி மயிலை கபாலீஸ்வரர், காஞ்சி ஏகாம்பரேஸ்வர், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர், சிதம்பரம் நடராஜர், மதுரை சுந்தரேஸ்வரர், நெல்லையப்பர் உள்ளிட்ட சிவாலயங்களில் சிறப்பு பூஜைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள 12 ஜோதிர்லிங்க ஆலயங்களில் தமிழகத்தில் அமைந்துள்ள ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலும் ஒன்றாகும். காசிக்கு நிகராக கருதப்படும் இங்கு நாள்தோறும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகிறார்கள்.

இந்த கோவிலில் மகா சிவராத்திரி விழா விமரிசையாக கொண்டாடப்படும். அங்கு இந்த ஆண்டுக்கான மாசி மகா சிவராத்திரி திருவிழா கடந்த 8-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

விழாவின் 7-ம்நாளான நேற்று காலை சுவாமி-அம்பாள் தங்க கேடயத்தில் எழுந்தருளி வீதி உலா வந்தனர். மாலை 5 மணிக்கு சுவாமி, அம்பாள் தங்கப்பல்லக்கில் முத்தங்கி சேவை அலங்கா ரத்தில் காட்சி தந்தனர்.8-ம் நாளான மகா சிவராத்திரியான இன்று (ஞாயிற்றுக்கிழமை) சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. காலை 9 மணிக்கு நடராஜர் கேடயத்தில் எழுந்தருளலும், இரவு 9 மணிக்கு வெள்ளி தேரோட்டமும் நடைபெறுகிறது. இன்று அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்ட கோவில் நடையானது பகல் 1 மணி மற்றும் இரவு 8 மணிக்கு சாத்தப்படாமல் பகல் மற்றும் இரவு முழுவதும் திறந்து இருக்கும். ராமநாதசு வாமிக்கு சிவராத்திரி சிறப்பு அபிஷேகம், பூஜைகள் நடக்கின்றன.

திருவிழாவில் 9-ம் நாளான நாளை (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு மேல் சுவாமி-அம்பாள் தேரோட்டம் நடைபெறுகிறது. மாலை 5 மணிக்கு தங்கக்குதிரை வாகனத்தில் பஞ்சமூர்த்திகளுடன் மேலத்தெரு மண்டகப் படிக்கு எழுந்தருளல் நடக்கிறது. மகா சிவராத்திரியை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் கோவிலில் குவிந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

## பிரதமர் மோடி வாழ்த்து



பக்தர்கள் அனைவருக்கு பிரதமர் நரேந்திர மோடி மகா சிவராத்திரி வாழ்த்துச் செய்தியை தமது எக்ஸ் தளப் பக்கம் வழியாகப் பகிர்ந்துள்ளார்.

அவர் இன்று காலை வெளியிட்டுள்ள பதிவில், 'நாடெங்கிலுமுள்ள எமது அனைத்துக் குடும்ப உறுப்பினர்களுக்கும் மகா சிவராத்திரி நாள் வாழ்த்துகள். ஒவ்வொருவர் மீதும் மகாதேவர் தமது கருணைப் பார்வையைச் செலுத்தட்டும் என்பதே எமது பிரார்த்தனையாக அமைந்திருக்கிறது. சிவபெருமானின் ஆசியால் நமது பாரதம் செழிப்பின் உச்சத்தில் அரியணையிட்டு நிலைத்திருக்கட்டும்' என்று வாழ்த்தியுள்ளார்.

## கேரளாவிலேயே மிகக் குறைந்த வயதில் உடல் உறுப்பு தானம் செய்த 10 மாதக் குழந்தை



பத்தனம்திட்டா,பிப்.16:

கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டத்தைச் சேர்ந்த 10 மாத பெண் குழந்தை அலின் ஷெரின் ஆபிரஹாம். கடந்த 5-ம் தேதி குழந்தையின் தாய், தாத்தா, பாட்டி ஆகியோர் கோட்டயத்திலிருந்து திருவல்லாவுக்கு காரில் சென்றனர். அப்போது எதிரில் வந்த மற்றொரு கார் இவர்களின் கார் மீது மோதியது.

இதில் ஷெரினின் தாய், தாத்தா மற்றும் பாட்டி காயமடைந்தனர். படுகாயமடைந்த குழந்தைசிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் மூளைச் சாவு அடைந்ததாக மருத்துவர்கள் அறிவித்தனர். இதையடுத்து, மருத்துவர்கள் குழந்தையிடமிருந்து கல்லீரல், 2 சிறுநீரகங்கள், இதய வால்வு, 2 கண்கள் ஆகியவற்றை தானமாக பெற்றனர். இதைத் தொடர்ந்து குழந்தையின் கல்லீரல், திருவனந்தபுரம் கிம்ஸ் மருத்துவமனையில் உள்ள 6 மாதக் குழந்தைக்குப் பொருத்தப்பட உள்ளது.




சிறுநீரகங்கள், திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரியில் உள்ள மற்றொரு குழந்தைக்கு வழங்கப்பட்டது. இதய வால்வு மற்றும் கண்கள், சித்ரா இன்ஸ்டிடியூட் மற்றும் அமிர்தா மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோருக்கு தானமாக வழங்கப்பட்டன.

இதன் மூலம் கேரளாவிலேயே மிகக் குறைந்த வயதில் உடல் உறுப்பு தானம் செய்த பெருமை அலின் ஷெரினுக்கு கிடைத்துள்ளது. இதையடுத்து ஷெரின் தொடர்பான செய்திகள், புகைப்படங்கள், வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளன.

இதுகுறித்து கேரள சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் தனது சமூக வலைதளப் பக்கத்தில் கூறும்போது, "குழந்தை இறந்த துக்கத்தில் இருந்தபோதும், குழந்தையின் உறுப்புகளை பெற்றோர் தானமாக அளித்தது பாராட்டுக்குரியது. துயரத்தில் இருக்கும் குடும்பத்துக்கு மாநில அரசு துணை நிற்கிறது. அவர்களின் செயல் கேரளாவில் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை அதிகப்படுத்தியுள்ளது" என்றார்.

## சோழவந்தான் தொகுதிக்கு தேமுதிக மாவட்ட துணை செயலாளர் விருப்பமனு



**வாடிப்பட்டி, பிப்.16:** மதுரை மாவட்டம் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினர் தேர்தலுக்கான விருப்ப மனுவை தேசிய முற்போக்கு திராவிட கழக மதுரை வடக்கு மாவட்ட கழக துணை செயலாளரும் சோழவந்தான் தொகுதி பொறுப்பாளருமான டாக்டர் பொன் யாழினி பாலாஜி சென்னை தலைமை கழகத்தில் பொதுச் செயலாளர் பிரேமலதாவிடம் வழங்கினார்

உடன் மாவட்ட துணை செயலாளர் முத்துக்குமார், ஆணையூர் மன்ற செயலாளர் பழனியாண்டி, அலங்காநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பிச்சை மணி, அலங்காநல்லூர் மேற்கு ஒன்றிய செயலாளர் அழகர் சாமி, மதுரை மேற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் சுந்தர், வாடிப்பட்டி பேரூர் செயலாளர் பாலாஜி, அலங்காநல்லூர் பேரூர் செயலாளர் வலசை ராஜா,பரவை பேரூர் செயலாளர்பால் பாண்டி, முன்னாள் வாடிப்பட்டி பேரூர் செயலாளர் ஜெயராஜ் ஆகியோரும் இருந்தனர்.

## பரவையில் இலவச தையல் பயிற்சி துவக்கம்






**வாடிப்பட்டி, பிப்.16:** மதுரை மாவட்டம் பரவை அண்ணாநகர் பகுதியில் ஸ்ரீமீனாட்சி மில் ஜி எச் சி எல் அறக்கட்டளை சார்பாக பெண்களுக்கு 1மாத கால இலவச தையல் பயிற்சி துவக்க விழா நடந்தது. இந்த விழாவிற்கு வார்டு கவுன்சிலர் திருஞானகரசி தலைமை தாங்கிகுத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

சமூக நல ஆர்வலர் திருப்பதி முன்னிலை வகித்தார். ஜி எச் சி எல் அறக்கட்டளை முதுநிலை மேலாளர் நிதி அலுவலர் சுஜின் தர்மராஜ் பயிற்சி திட்டங்களைப் பற்றியும் பயிற்சி திட்ட நோக்கங்களையும் எடுத்து கூறி பயிற்சிக்கு தேவையான உபகரணங்களை வழங்கினார்.

இதில் பெட் கிராட்நிர்வாக இயக்குனர் சுப்புராமன் பயிற்சியில் பெண்கள் சுயதொழில் முன்னேற்றம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை அடைந்திட வேண்டும் என்று பேசினார். பெட்கிராட் துணை தலைவர் சுசிலா குணசீலி இப் பயிற்சியின் மூலம் பெண்கள் சுயதொழில் தொடங்கி பொருளாதார மாற்றம் ஏற்படும் என்று பேசினார்.

பயிற்சியாளர் விஜயவள்ளி பயிற்சியில் வரும் 23 தையல் வகைகள் மற்றும் வடிவங்கள் பயிற்சிகள் கற்றுத் தரப்படும் என்று கூறினார் இதன்

நிகழ்ச்சிஏற்பட்டினை பெட்கிராட் ஒருங்கிணைப்பாளர் கண்ணன் ஏற்பாடு செய்திருந் தார். முடிவில் அலுவலர் ரஞ்சித் நன்றி கூறினார்.

## தயாரிப்பாளர் ஆர்.எம்.வீரப்பனின் மகன் மறைவு- இ.பி.எஸ். இரங்கல்

**சென்னை, பிப்.16:** அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

புரட்சித்தலைவர் எம்ஜிஆர், புரட்சித்தலைவி அம்மா ஆகியோரின் அமைச்சரவையில் மூத்த அமைச்சராக பணி யாற்றியவரும், அதிமுக-வில் மூத்த முன்னோடியாக விளங்கிய, மறைந்த மரியாதைக்குரிய ஆர். எம். வீரப்பன் அவர்களின் மகனும்,

தமிழ்த் திரையுலகில் தயாரிப்பாளராகவும் இயக்குன ராகவும் பணியாற்றியவரும், சிறப்பான ஆன்மீக சேவை புரிந்தவருமான

வீ. தமிழ் அழகன் அவர்கள் காலமானார் என்ற செய்தி



அறிந்து மிகுந்த துயருற்றேன்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதுடன், மறைந்த அவர்தம் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## செய் களத்தூர் கடம்பவன காமாட்சி அம்மன் கோவிலில் வருடாந்திர உற்சவ விழா



**மானாமதுரை,பிப்.16:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ளது. பிரசித்தி செய்களத்தூர் கடம்பவன அருள்மிகு ஸ்ரீகாமாட்சி அம்மன் திருக் கோவிலில் ஆண்டுதோறும் மாசி மாத வருடாந்திர உற்சவ விழா மூன்று நாட்கள் நடைபெறும்.

முதல் நாள் விழாவில் பக்தர்கள் வைகை ஆற்றில் இருந்து தீர்த்தம் மற்றும் பூஜை பெட்டி சுமந்து வந்து சாமியாடி காமாட்சி அம்மனை வழிபட்டனர்.

இரண்டாம் நாள் காலை பால்குடம் ஊர்வலம் நடைபெற்றது ஏராளமான பக்தர்கள் பால்குடம் சுமந்து வந்து அம்மனுக்கு அபிஷேகம் ஆராதனை நடைபெற்றது. மாலை ஏராளமான பெண் பக்தர்கள் குடும்ப நலன் வேண்டியும், தொழில் வளம் செழிக்க வேண்டி திருவிளக்கு பூஜை வழிபாடு செய்தனர். அதை தொடர்ந்து சிவராத்திரி வழிபாடு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழகத்தில் உள்ள பல்வேறு ஊர்களில் வசிக்கும் செய்களத்தூர் கடம்பவன காமாட்சி அம்மன் வழிபாடு செய்யும் குடிமக்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

விழா ஏற்பாடுகளை விழாக்குழுவினர் மற்றும் திருக்கோவில் பங்காளிகள் செய்து இருந்தனர்.

## கீழடி திறந்த வெளி அருங்காட்சியகம், செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்த் வருகை




**சிவகங்கை, பிப் .16:** சிவகங்கை மாவட்டம் மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் உள்ள கீழடியில் திறக்கப்பட்ட திறந்த வெளி அருங்காட்சியகத்தை செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்த் கண்டு ரசித்தார். 24 கோடியே 30 லட்ச ரூபாய் செலவில் கீழடியில் அகழாய்வு நடந்த இடங்கள் திறந்த வெளி அருங்காட்சியகமாக மாற்றப்பட்டு நேற்று முதல் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

பிரபல செஸ் வீரர் விஸ் நாதன் ஆனந்த் குடும்பத்தினருடன் வருகை தந்தார். அவரை கீழடி அகழாய்வு தள இயக்குனர் ரமேஷ், இணை இயக்குனர் அஜய் குமார், கீழடி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வெங்கட சுப்ரமணியன் வரவேற்றனர். திறந்த வெளி அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள மீன் உருவம் பொறித்த உறை கிணறு, சிவப்பு நிற கொள்கலன், செங்கல் கட்டுமானம், உலைகலன் ஆகியவற்றை கண்டு ரசித்தார். அகழாய்வு பொருட்கள் குறித்து இயக்குனர் ரமேஷ் விளக்கமளித்தார். பின் கீழடியில் இரண்டு ஏக்கர் பரப்பளவில் உள்ள தொல்பொருள் அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார்.





தொல்பொருள் அருங்காட்சி யகத்தில் காட்சிப் படுத்தப்பட்ட ஆட்டக் காய்கள், பகடைகள் கண்டு வியந்தார். பண்டைய கால பொருட்கள், அவை காட்சிப்படுத்தப்பட்ட விதம் ஆகியவற்றை பாராட்டினார்.

பின் செய்தியாளர்களிடம் பேசுகையில் கீழடி அருங் காட்சியகம் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் ஜெர்மனியில் உள்ள மியூசியம் சென்றிருந்தேன். அதனை விட பழமையானது கீழடி தளம் என்றார்.

## தவசிமடையில் ஜல்லிக்கட்டு: சீறிப்பாய்ந்த காளைகளை போட்டி போட்டு அடக்கிய வீரர்கள்

**திண்டுக்கல், பிப்.16:** திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி அருகே தவசிமேடையில் புனித அந்தோணியார் திருவிழாவை முன்னிட்டு நேற்று ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது. இதையொட்டி திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்த 800 காளைகளை மண்டல இணை இயக்குனர் விஷ்ணுகந்தன்,துணை இயக்குனர் சரவணன், உதவி இயக்குனர்கள் சரவணகுமார், ஜெயராஜ் ஆகியோர் மேற்பார்வை யில் டாக்டர் பிரபாகர் தலைமையிலான குழுவினர் கால்நடைகளை பரிசோதனை செய்து ஜல்லிக்கட்டில் பங்கேற்க அனுமதி வழங்கினர்.

இதே போல் மாடுபிடி வீரர்கள் 350 பேரை வட்டார மருத்துவ அலுவலர் ஜெனி தலைமையிலான மருத்துவ பணியாளர்கள் பரிசோதனை செய்து காளைகளை அடக்க அனுமதித்தனர். மாடுபிடி வீரர்கள் உறுதிமொழியுடன் 7.40 மணி அளவில் ஜல்லிக்கட்டு தொடங்கியது. ஜல்லிக்கட்டை கோட்டாட்சியர் திருமலை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் மேற்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் விஜயன், கிழக்கு தாசில்தார் ராஜேந்திரன், வருவாய் ஆய்வாளர் ரஞ்சித் குமார், வி.ஏ.ஒ. ரிச்சர்டு ஆகியோர் உடன் இருந்தனர். முதலில் கோவில் காளை அவிழ்த்து விடப்பட்டது. அதனை யாரும் பிடிக்கவில்லை.



அதன்பின் உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங் களில் இருந்து கொண்டு வரப்பட்ட காளைகள் ஒவ்வொன்றாக வாடிவாசலில் இருந்து அவிழ்த்து விடப்பட்டன. காளைகள் குட்டி புலி, வீரா, வெடிகுண்டு, கருப்பு, அசுரன், வெள்ளப் பறவை உள்ளிட்ட பல்வேறு விதவிதமான பெயர்களில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. சில காளைகள் யாரிடமும் பிடிபடாமல் சீறிப் பாய்ந்து சென்று தனது உரிமையாளருக்கு பரிசுகளை பெற்றுக் கொடுத்தது. காளைகளை மாடுபிடி வீரர்கள் லாவகமாக பிடித்தனர். சில காளைகள் மைதானத்தில் நீண்ட நேரம் நின்று விளையாடின. இதனை பார்த்த பார்வையாளர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

மேலும் கடந்த சில தினங் களுக்கு முன் புகையிலைப்பட்டியில் நடைபெற்ற ஜல்லிக்கட்டில் ஆள் மாறாட்டத்தில் காளையை அடக்கிய பாலகுரு பலத்த காயமடைந்து பரிதாபமாக உயிரிழந்தார். அதனைத் தொடர்ந்து மாடுபிடி வீரர்கள் ஆள் மாறாட்டம் செய்வதை தவிர்க்க மாடுபிடி வீரர்களின் கையில் வண்ண கலரில் பெயிண்ட் அடிக்கப்பட்டது.

ஜல்லிக்கட்டு போட்டியில் மாட்டின் உரிமையாளர் பாலமேடு பகுதியைச் சேர்ந்த விக்னேஷ் (வயது 22) என்பவர் படுகாயம் அடைந்தார். அவரை மருத்துவ குழுவினர் மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கூடுதல் போலீஸ் துணை சூப்பிரண்டு மகேஷ் மேற்பார்வையில், போலீஸ் துணை சூப்பிரண்டு சங்கர், திண்டுக்கல் டவுன் போலீஸ் டி.எஸ்.பி. கார்த்திக், சாணார்பட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரபாகரன், நத்தம் போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன் குணசேகர் உள்பட 340 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும் பிடிபடாத காளைகளின் உரிமையாளர்களுக்கும் தங்க காசு, வெள்ளி காசு, அண்டா, குடம், சைக்கிள், குத்து விளக்கு, வயர் கட்டில், குக்கர், பணம் உள்ளிட்ட பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டது. ஜல்லிக்கட்டு போட்டியை காண பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அங்கு குவிந்தனர். இதற்கான ஏற்பாடுகளை ஊர் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் செய்திருந்தனர்.

## சத்சங்கம் & விசேஷ கூட்டுப் பிரார்த்தனை



**தஞ்சாவூர், பிப்.16:** தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் (06.02.2026) வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடன் ஸ்ரீஸ்வாமிஜின் சீடர் ஸ்ரீமுரளீஜி அவர்களின் சத்சங்கம் & விசேஷ கூட்டுப் பிரார்த்தனை சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், தஞ்சை நாமத்வார் மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

**செய்தி: T.P.குமரன்,
மகர்நோம்புச்சாவடி,
தஞ்சாவூர்**

## திருப்புவனம் பகுதியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



**மானாமதுரை, பிப் .16:** சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பேரூராட்சி பகுதியில் தமிழக முதல்வர் வழங்கிய மகளிர் உரிமை தொகை ரூ5000 வழங்கியதற்க்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் தலைமையில் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் 2026 சட்ட மன்ற தேர்தலில் மீண்டும் திமுக அரசு வெற்றி பெற்று மகளிர் உரிமை தொகை ரூ2000 வழங்கப்படும் என தமிழக முதல்வர் முகஸ்டாலின் கூறியதை மக்களிடம் கூறினார். தமிழரசி எம்எல்ஏ மானாமதுரை நகராட்சி தலைவர் முன்னாள் எம்எல்ஏ மாரியப்பன் கென்னடி உள்பட திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டும் கட்சிகள்: கோவையில் வாடகை வாகனங்களுக்கு மவுசு அதிகரிப்பு



**கோவை, பிப்.16:** தமிழ்நாட்டில் சட்டசபை தேர்தல் விரைவில் நடக்க உள்ளது. தேர்தலை சந்திக்க அனைத்து கட்சிகளும் கூட்டணி பேச்சு வார்த்தை, தொகுதி பங்கீடு உள்ளிட்ட விஷயங்களில் தீவிரம் காட்டி வருகின்றன.

தேர்தல் கூட்டணி இன்னும் இறுதிக்கட்டத்தை எட்டாத நிலையில், முக்கிய கட்சிகள் இப்போதே தேர்தல் களத்தில் இறங்கி விட்டன.

கோவையில் அ.தி.மு.க. சார்பில் மினி லாரி மற்றும், மினி ஆட்டோக்களை வாடகைக்கு பிடித்து ஒவ்வொரு வார்டு, பகுதி வாரியாக சென்று அ.தி.மு.க.வினர் தெருமுனை பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதுவரை நூற்றுக்கணக்கான தெருமுனை பிரசாரங்கள் நடத்தப்பட்டுள்ளது. இதற்காக வாகனங்களை வாடகைக்கு பிடித்து மைக் மூலம் பிரசாரம் நடக்கிறது.

அதேபோன்று பா.ஜ.க சார்பில் மக்களிடம் கருத்து கேட்கும் இயக்கம் நடத்தப்படுகிறது. இதற்காக வாகனங்களில் ஒவ்வொரு பகுதியாக சென்று வாகனங்களை நிறுத்தி வைத்து பொதுமக்களிடம் துண்டு சீட்டு கொடுத்து நிரப்பி, அதனை உள்ளே போடுமாறு தெரிவித்து வருகின்றனர். இந்த வாகனங்களும் கோவை பகுதியை சுற்றி வருகின்றன.

அதேபோன்று தி.மு.க சார்பில், தேர்தல் அலுவலகம் திறப்பு, ஆட்டோ நிறுத்தம் திறப்பு, பொதுக்கூட்டம் என்று கோவையில் தேர்தல் களத்தில் தி.மு.க தீவிரமாக வலம் வருகிறது.

தி.மு.க., அ.தி.மு.க கட்சியினர் தேர்தல் களத்தில் தினமும் வாகனங்களை வாடகைக்கு எடுத்து மக்களை சந்தித்து வருகிறார்கள். இதனால் வாடகை வாகனங்கள் வைத்திருப்பவர்கள் தொழில் சூடு பிடித்துள்ளது.


இதுவரை லோடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்த இந்த வாகனங்கள் தற்போது தேர்தல் களத்தில் வலம்வர தொடங்கியுள்ளன. அரசியல் கட்சிகள் போட்டி போட்டு வாடகைக்கு அமர்த்தி வருவதால் இனி லாரி வாகனங்கள், மினி ஆட்டோக்களுக்கான மவுசு அதிகரித்துள்ளது. இதனால் வாடகை கட்டணம் உள்ளிட்ட கட்டணமும் அதிகரித்து வருகிறது.


Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹ 999 ONLY


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
New / Resale ...
Residential / Commercial ...
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
a PROPERTY
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மிக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

# கவிதை அரங்கம்!





ஒவ்வொரு விடியலும்
உணர்த்துவது ஒன்றை
தான்
இன்னொரு வாய்ப்பு
இருக்கிறது
பயன்படுத்திக் கொள்
என்று

நம்பிக்கை என்னும்
ரதத்தில்
பயணித்து கொண்டு
இருப்பவர்களுக்கு
வெற்றியின் இலக்கு
தூரம் இல்லை

கடினமான வாழ்வே
மனிதனை உறுதியாக்கும்

போராளிகள் எப்போதும்
தானாய் உருவாவதில்லை
சிறுக சிறுக மெருகேற்றி
உருவாக்கப் படுகிறார்கள்

கழுகுகளுடன்
பறக்க
வேண்டுமென்றால்
வாத்துகளுடன்
நீந்துவதை
நிறுத்த வேண்டும்

## வாழ்க்கை தத்துவம்...



நாளை என்ன ஆகும்
என்பதைக் கவலைப்படாமல்
இன்றைய தருணத்தை
வாழ்ந்துவிட்டால் வாழ்க்கை அழகாகும்

வாழ்க்கையில்
முடிவு கிடையாது
அடுத்த அனுபவம் தான்
புதிய தொடக்கம்

சின்ன தவறுகளே
பெரிய பாடமாக மாறி
வாழ்க்கையை வடிவமைக்கின்றன

உன் முயற்சியின் சத்தம்
வெற்றியின் ஓசையை விட
சத்தமாக இருக்க வேண்டும்

உண்மையான வாழ்க்கை
நாம் பெறுவதில் இல்லை
நாம் பகிர்வதில் தான்

# உயில்



தமிழ்நிலவன் நேற்று அதிகாலையில் இறந்துபோனார். உறக்கத்திலேயே உயிர் பிரிந்துபோனது எத்தகைய கொடுப்பினை. அவர் மனைவி தென்றல் எல்லாருக்கும் கைப்பேசியிலிருந்து தகவல் அனுப்பிக்கொண்டிருந்தாள். அக்கம் பக்கம் இருந்தவர்கள் கேள்விப்பட்டு உடன் வந்து அவளுக்கு உதவி செய்துகொண்டிருந்தார்கள். பாட்டி.. எழில் அக்காவிற்குப் பேசியாச்சா? வேண்டாம்பா.. எழிலுக்கு அவளோட உறவுகள் யாருக்கும் தகவல் சொல்ல வேண்டாம்பா.. ஏம் பாட்டி? உங்க தாத்தா உயிரோட இருந்தப்பவே எழுதி வச்ச உயில் அது. என்ன உயில்பாட்டி? தன்னோட சாவுக்கு உறவுகள் யார் யாரெல்லாம் வரக்கூடாது என்று எழுதி வச்சிருக்கார்.. எதுக்கு பாட்டி? அவருக்குன்னு சில கொள்கை இருக்குப்பா.. அதுலேர்ந்து எப்பவும் அவர் மாறா நடந்ததில்லை.. அதன்படி நாலுபேர் தூக்க இருந்தாக்கூடப் போதும்னு உயில் எழுதி வச்சிருக்காரு.. தன்னோட சாவுக்கு எவ்வளவு பணம்.. மறுநாள் பால்தெளியல்.. பதினாறாம் நாள் காரியம்.. இப்படி எல்லாத்துக்கும் பணத்தை எண்ணிக் கவர் போட்டு வச்சிட்டுப்போயிருக்காரு.. சாவுக்கெல்லாம் அநாவசியமா செலவு பண்ணக்கூடாது.. அதை ஏழைங்களுக்குக் கொடுக்கலாம்னு எழுதி வச்சிருக்காரு.. தன்னோட ஓய்வூதியத்திலேயே ஒரு பங்கை மாதாமாதம் ஒவ்வொரு அநாதை இல்லத்துக்கு அனுப்பிடுவாரு.. தேவைக்கு மேல பணம் இருந்தா நல்லதில்லன்னு சொல்வாரு..

அதுசரி பாட்டி எழில் அக்காவுக்கு ஏன் தகவல் அனுப்பக்கூடாதுன்னு எழுதி வச்சிட்டுப்போயிருக்காரு தாத்தா.. அவரோட மகள் ஆச்சே.. ஆமாம்.. ஆனா எழில் அவளோட பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பெயர் வைக்கணும்னு தாத்தா பிடிவாதமா சொன்னாரு.. அதக் கேட்கலே.. மாப்பிள்ளை கிட்டயும் சொல்லிப் பாத்தாரு.. எங்க உரிமையில ஏன் தலையிடறீங்கன்னு மூஞ்சில அடிச்சமாதிரி பேசிட்டாரு.. தமிழைப் பிடிக்காத உறவு யாரா இருந்தா என்னன்னு உறவறுத்துட்டார்.. இனிமே என்னோட உறவு கிடையாதுன்னு சொல்லிட்டாரு.. எழில் இங்க பிள்ளைங்கள அழச்சிட்டு வந்தப்பா இவரு வெளியூரு கிளம்பிப்போயிட்டாரு. அதனால இப்போ எழில் வர்றத நிறுத்திட்டா.. காரியங்கள் நடக்க ஆரம்பித்தன. கொஞ்சம் கூட்டம் இருந்தாலும் எல்லாரும் தமிழ்நிலவன் மேல் மரியாதை கொண்டவர்கள்.. யாருக்கும் உதவியைத் தவிர வேறு எந்த இடரையும் தராதவர்.. நேரம் பார்த்தார்கள்.. தண்ணீர் தூக்கப்போனார்கள்.. யார் கொள்ளி வைப்பது என்கிற பிரச்சினை வந்தது.. தென்றல் நான் வைக்கிறேன் என்றாள். கூட்டம் எதுவும் பேசவில்லை. அந்த நேரம் பார்த்து ஒரு கார் வந்தது. காரிலிருந்து எழில் அவள் கணவன் பிள்ளைகள் இறங்கினார்கள்.. அப்பா.. என்று அலறியபடி ஓடிவந்தாள். வெளியே போ.. அவர் உன்னை வரவேண்டாம்னு எழுதி வச்சிட்டுப் போயிருக்காரு.. என்னம்மா நீங்க.. அவர்தான் ஏதோ பைத்தியக்காரத்தனமா செஞ்சிருந்தா.. நீங்களும் பெத்த மகள வேண்டாம்னு விரட்டறீங்க என்றார்கள். முடியாது. அவர்தான் எனக்கு முக்கியம்.. வெளியே போ என்று எழிலைப் பார்த்துக் கத்தினாள் தென்றல். எழிலின் கணவன் வந்தான் தென்றலிடம். அத்தை இங்கப் பாருங்க.. நாங்க செஞ்சது தப்புதான்.. இதப்பாருங்க.. என்று சில பேப்பர்களைக் காண்பித்தான்.. மாமா விருப்பப்படியே என்னோடப் பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பெயர் வைத்து கெஜட்டுல மாத்திட்டோம்.. என்றதும் தென்றல் வாய்விட்டழுதாள் மகள் எழிலைக் கட்டிக்கொண்டு.. முன்னமே செஞ்சிருக்கக்கூடாதா? என்றபடி. இப்போது எழிலின் கணவன் சொன்னான்.. பிள்ளையா நின்று நான் மாமாவுக்குக் கொள்ளி வைக்கிறேன்..

ஹரணி,
தஞ்சாவூர்-2

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*சார்... ஆறு வருஷத்துல நீங்க போட்ட பணம் இரட்டிப்பாகும்னு சொன்னீங்களே... என்ன ஆச்சு?*

*நிதி நிறுவனம் : இரட்டிப்பாகும்னு தானே சொன்னோம்.. திருப்பித் தர்றதா சொல்லலையே!*



# தினம் ஒரு சமையல்



## பாசிப்பருப்பு சாம்பார்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பாசிப்பருப்பு | -1/2 கப் |
| வெங்காயம் | -10 சின்ன |
| சிறிய தக்காளி | -2 |
| வரமிளகாய் | -5 |
| உப்பு | -தேவைக்கு |
| கடுகு | -1 டீஸ்பூன் |
| சீரகம் | -1டீஸ்பூன் |
| கருவேப்பிலை | -10 |
| கொத்தம் மல்லி | -சிறிது |

**செய்முறை:**



பாசிப்பருப்பை வறுத்து குக்கரில் 3 சத்தம் விட்டு வேக விடவும்

வாணலியில் எண்ணெய் ஊற்றி கடுகு ஜீரகம் சேர்த்து பின்னர் வெங்காயம் தக்காளி வரமிளகாய் கறிவேப்பிலை சேர்த்து வதக்கவும்

பின்னர் இதனை பாசிப்பருப்பு குக்கரில் சேர்த்து உப்பு சேர்த்து மேலும் 4 சத்தம் விட்டு மல்லி இலைகள் தூவி பரிமாறவும்

# மருதம் பயன்கள்



ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆயுர்வேத சிகிச்சையில் மரபு வைத்தியத்தில் முக்கியமான மரமாக மருதமரம் (அர்ஜுனா) சிறப்பான இடம் பெற்றுள்ளது.

அர்ஜுனா பட்டை என்று அழைக்கப்படும் அதன் பட்டை, குறிப்பாக இதய நோய்கள், இரத்த அழுத்தக் குறைபாடுகள், குணமடையாத புண்கள், இரத்த ஓட்டக் கோளாறுகள் போன்றவற்றில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இன்றைய காலச் சூழலில் மன அழுத்தம், தவறான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி இல்லாமை போன்ற காரணங்களால் இதய நோய், உயர் இரத்த அழுத்தம் அதிகமாக வருகிறது. இப்படிப்பட்ட சூழலில் இயற்கைத் தீர்வாக அர்ஜுனா பட்டை பொதுமக்களிடையே அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது.

அர்ஜுனா பட்டையின் மூலிகைப் பண்புகள்: அதில் அடங்கியுள்ள டேன்னின், சபோனின், பிளாவனாய்டு, கால்சியம், மக்னீசியம், சிங்க் போன்ற கனிமச் சத்துகள் இதய தசைகளைப் பலப்படுத்தி, இரத்தக் குழாய்களின் சுவர்களைப் பாதுகாத்து உடலுக்குச் சத்து தருகின்றன.

அர்ஜுனா பட்டையின் மருத்துவ நன்மைகள்:

இதய ஆரோக்கியம்: அர்ஜுனா பட்டை 'ஹார்ட்டானிக்' எனப்படும் இயற்கை மருந்தாகக் கருதப்படுகிறது. இதயத்துடிப்பு சீராகும். இதய தசைகளின் பலம் அதிகரிக்கும். மாரடைப்புக்குப் பிந்தைய நோயாளிகளுக்கும் சிறிய அளவு 'அர்ஜுனா கஷாயம்' அல்லது சாறு பரிந்துரைக்கப்படுகிறது.

உயர் மற்றும் குறைந்த இரத்த அழுத்தம்: இரத்த அழுத்தத்தைச் சமநிலைப்படுத்தும் தன்மை கொண்டது. இரத்தக் குழாய்களில் ஏற்படும் சுவர் கீறல்கள், வலிமை குறைபாடு போன்றவற்றைச் சரி செய்ய உதவுகிறது.

இரத்த ஓட்டம் மற்றும் கொழுப்புக் குறைப்பு: உடலில் கெட்ட கொழுப்பைக் குறைத்து நல்ல கொழுப்பை அதிகரிக்கிறது. இரத்த ஓட்டம் சீராக நடைபெறச் செய்கிறது.

சுவாசக் கோளாறுகள்: ஆஸ்துமா, இருமல், மூச்சுத்திணறல் ஆகியவற்றில் அர்ஜுனா பட்டைச் சாறு நிவாரணம் தருகிறது.

குடல் மற்றும் வயிற்று பிரச்னைகள்: குடல் புண், அமிலக் கோளாறு, அடிக்கடி வரும் வயிற்றுப்போக்குப் போன்றவற்றைக் குறைக்கிறது.

புண் ஆற்றும் தன்மை: அர்ஜுனா பட்டை விழுதை புண்களில் தடவினால் விரைவில் ஆறுகிறது. எலும்பு முறிவு மற்றும் வீக்கம் குறைய பயன்படுகிறது.

சிறுநீரக நன்மைகள்: சிறுநீரை அதிகரிக்கச் செய்து, உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்ற உதவுகிறது. சிறுநீரகக் கற்களை வெளியேற்றும் திறனும் கொண்டது.

பயன்படும் முறைகள்: அர்ஜுனா கஷாயம் - பட்டையைச் சிறு துண்டுகளாக நறுக்கி, தண்ணீரில் கொதிக்க வைத்து அருந்தலாம். தினமும் காலை, மாலை அருந்தினால் இதய ஆரோக்கியத்திற்கு மிகுந்த பலன்.

அர்ஜுனா பட்டை பொடி - பட்டையை நன்கு உலர்த்திப் பொடியாக்கி, தேனுடன் கலந்து உட்கொள்ளலாம்.

அர்ஜுனா பட்டை பால் கஷாயம் - பட்டையைப் பாலில் சேர்த்துக் கொதிக்க வைத்து அருந்தினால், இதயத்திற்குச் சிறந்த ஊட்டச்சத்து கிடைக்கும்.

# பூக்கி - மை லார்ட் படங்களின் வசூல்.. பாக்ஸ் ஆபீஸ் ரிப்போர்ட்





கடந்த 13ஆம் தேதி தமிழ் சினிமாவில் இருந்து வெளிவந்த திரைப்படங்கள் பூக்கி மற்றும் மை லார்ட். இந்த இரண்டு திரைப்படங்கள் இரண்டு நாட்களில் உலகளவில் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

விஜய் ஆண்டனி தயாரித்து, இசையமைத்து அஜய், தனுஷா இணைந்து நடித்து வெளிவந்த படம் பூக்கி. காதல் கதைக்களத்தில் உருவாகி வெளிவந்த இப்படத்திற்கு கலவையான விமர்சனங்கள் கிடைத்துவருகிறது.

இந்நிலையில், பூக்கி திரைப்படம் வெளிவந்து இரண்டு நாட்கள் ஆகும் நிலையில், இதுவரை உலகளவில் ரூ. 65+ லட்சம் வசூல் செய்துள்ளது.

இயக்குநர் ராஜூ முருகன் இயக்கத்தில் சசிகுமார், சைத்ரா அச்சர் நடிப்பில் உருவாகி வெளிவந்த மை லார்ட் படத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இப்படத்தின் மூலம் ராஜூ முருகன் பேசியுள்ள அரசியல் இந்த காலகட்டத்திற்கு மிக முக்கியமான ஒன்று என பலரும் கூறி வருகிறார்கள்.






விருதைவாங்க கீர்த்தி சுரேஷ் அழகிய சேலையில் வந்திருந்தார். அந்த உடையில் அவர் எடுத்த போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# ஜனநாயகன் படம் ஏப்ரல் 30ம் தேதி வரை ரிலீஸ் ஆக வாய்ப்பு இல்லை - வெளியான முக்கிய தகவல்



YORK CINEMAS


Dear Patrons,

Please note that the movie Jana Nayagan will not be releasing before April 30th. If you have any pending tickets and your refund has not yet been processed, kindly contact our theatres to have it arranged at the earliest.

All our loyal membership holders will receive priority booking access once the new release date is confirmed.

Thank you for your patience, understanding, and continued support.

Sincerely,
York Cinemas Management




ஹெச். வினோத் இயக்கத்தில் விஜய், பூஜா ஹெக்டே, மமிதா பைஜு ஆகியோர் நடிப்பில் உருவாகி உள்ள 'ஜன நாயகன்' பொங்கலை முன்னிட்டு ஜன.9-ல் வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் விஜய்யின் கடைசிப் படம் என்பதால் இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்திருந்தது. ஆனால் தணிக்கை பிரச்சனையால் தற்போது வரை வெளியாகவில்லை.

தணிக்கை சான்றிதழ் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தயாரிப்பு நிறுவனம் தரப்பில் வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வந்தது. இதனிடையே இந்த வழக்கை வாபஸ் பெற்ற பட தயாரிப்பு நிறுவனம் ஜன நாயகன் படத்தை மறு தணிக்கைக்கு அனுப்பியுள்ளது.

இந்நிலையில், சென்சார் பிரச்னையில் சிக்கியுள்ள நடிகர் விஜய்யின் ஜனநாயகன், ஏப்ரல் 30ம் தேதி வரை ரிலீஸ் ஆக வாய்ப்பு இல்லை என கனடா விநியோகஸ்தர் York Cinemas அறிவித்துள்ளது.

முன்பதிவு செய்த அனைவரும் டிக்கெட்டுக்கான தொகையை திரும்ப வாங்கிக் கொள்ளுமாறு York Cinemas தெரிவித்துள்ளது. இதனால் விஜய் ரசிகர்கள் வேதனை அடைந்துள்ளனர்.




குடும்ப தோஷங்களை போக்கும் அரிய சிவஸ்தலம்

திருநெல்வேலிக்கு அருகிலுள்ள அருகன்குளம் என்னும் சிற்றூரில், பல தலைமுறைகளாக தொடரும் குடும்ப தோஷம், பித்ரு தோஷம், சந்ததி தடைகள் இவற்றிற்கு நிவாரணம் தரும் ஒரு அரிய சிவஸ்தலம் உள்ளது.
அதுவே “பழைய ராமேசுவரம்” எனப் பக்தர்களால் போற்றப்படும் ராமலிங்க சுவாமி திருக்கோவில்.

**தலத்தின் சிறப்பு**
திருநெல்வேலி சந்திப்பு அருகே, சுமார் 5 கி.மீ தொலைவில் அமைந்துள்ள அருகன்குளம் கிராமம், பண்டைய காலத்தில் புனித பூமியாகக் கருதப்பட்டது.
இங்குள்ள சிவலிங்கம், திரேதா யுகத்தில் ஸ்ரீ ராமபிரான் தாமிரபரணி கரையில் பிரதிஷ்டை செய்ததாக தல புராணங்கள் கூறுகின்றன.
அதனால் தான் இந்த தலம் “பழைய ராமேசுவரம்” என்று அழைக்கப்படுகிறது.

**ஜடாயு தீர்த்த வரலாறு.**
சீதையை ராவணன் கடத்திச் செல்லும்போது, அதைத் தடுக்க முயன்ற வீரப் பறவையான ஜடாயு, ராவணனுடன் கடும் போரில் ஈடுபட்டான்.
அந்தப் போரில் காயமடைந்த ஜடாயு, அருகன்குளம் வனப்பகுதியில் வீழ்ந்து கிடந்தான்.
அப்போது அங்கு வந்த ஸ்ரீ ராமரும் லட்சுமணரும், ஜடாயுவை பரிவுடன் பார்த்து அவனுக்கு ஆறுதல் அளித்தனர்.
இறப்பிற்கு முன், “என் இறுதிச்சடங்குகளை நீங்களே செய்து தர வேண்டும்” என்று ஜடாயு வேண்டிக்கொண்டதாக புராணங்கள் கூறுகின்றன.
அதன்படி தாமிரபரணி நதிக்கரையில் ராமபிரான் தர்ப்பணம், தீர்த்தம், மரியாதைகள் செய்து ஜடாயுவுக்கு பூரண விரதோசனம் அளித்தார்.
இந்தப் புனித இடமே இன்று “ஜடாயுத்துறை” என்று அழைக்கப்படுகிறது.

**ராமலிங்க சுவாமி கோவிலின் மகிமை**
இங்கு ஸ்ரீ ராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் “ராமலிங்க சுவாமி” என்ற திருநாமத்துடன் அருள்பாலிக்கிறார்.

**கோவில் வளாகத்தில் :**
ராமலிங்க சுவாமி
பிண்ட ராமர்
ஜடாயு
பர்வதவர்த்தினி அம்மை
விநாயகர்
முருகன்
தட்சிணாமூர்த்தி
என பல சன்னதிகள் அமைந்துள்ளன.
பிற்காலத்தில் வல்லபாண்டிய மன்னர்களால் இக்கோவில் புனரமைக்கப்பட்டதாகவும், பூஜை முறைகள் இன்றளவும் தொடர்வதாகவும் கூறப்படுகிறது.

**தீர்த்தங்களின் தெய்வீக தன்மை**
**இத்தலத்தில் மிக முக்கியமான மூன்று தீர்த்தங்கள் உள்ளன :**

ஜடாயு தீர்த்தம்
ராம தீர்த்தம்
சிவ தீர்த்தம்

இந்த தீர்த்தங்கள் தாமிரபரணி நதியில் கலக்கும் இடத்தில் ஸ்நானம் செய்து வழிபட்டால்,

**27 தலைமுறை தோஷங்கள்**
பித்ரு தோஷம்
வம்ச தடைகள்
நீங்கும் என்பது பக்தர்களின் ஆழ்ந்த நம்பிக்கை.
**குடும்ப தோஷ நிவாரண பரிகாரம்**

இக்கோவிலில் உள்ள பழமையான கல் விளக்கில்,

இலுப்பை எண்ணெய்
நல்லெண்ணெய்
இரண்டையும் கலந்து தீபம் ஏற்றி வழிபடுவது,

**குடும்ப சாந்தி**
உறவுகளில் ஒற்றுமை
வாழ்க்கை முன்னேற்றம்
இவற்றை அளிக்கும் என்று பெருமையுடன் கூறப்படுகிறது.
குழந்தை பாக்கியம் வேண்டுவோர்
ராமலிங்க சுவாமி மற்றும் பிண்ட ராமர் இவர்களுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து வழிபட்டால்,
குழந்தை பாக்கியம்
சந்ததி விருத்தி
கிடைக்கும் என்பது பல பக்தர்களின் அனுபவ நம்பிக்கை.

**கோவில் நேரம்**
காலை: 8.00 10.00
மாலை: 5.00 6.30

**செல்லும் வழிகள்**

திருநெல்வேலி சந்திப்பு 5 கி.மீ
தாழையூத்து 3 கி.மீ

**மினிபஸ் வசதி உள்ளது**
**ஆட்டோ மூலம் செல்லலாம்**
**சென்னை நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலை அருகே அமைந்துள்ளது.**

**சிறப்பு நாட்கள்.**

ஆடி அமாவாசை
தை அமாவாசை
புரட்டாசி மகாளய அமாவாசை

இந்த நாட்களில் ஜடாயுத்துறையிலதர்ப்பணம் செய்து, ராமலிங்க சுவாமி & பிண்ட ராமர் வழிபாடு செய்தால் மிகுந்த புண்ணியம் என நம்பப்படுகிறது.
இறுதிக் குறிப்பு

**பழைய ராமேசுவரம் ஒரு சாதாரண சிவாலயம் அல்ல.**

இது ஒரு தலைமுறை அல்ல
பல தலைமுறைகளுக்கான
பாவ நிவாரண ஸ்தலம்.

குடும்ப சாந்தி, பித்ரு தோஷ நிவாரணம், வாழ்க்கை முன்னேற்றம் வேண்டுபவர்கள் இந்த தலத்தை தவறாமல் தரிசிக்க வேண்டிய ஒரு அரிய புனித ஸ்தலம்.

முனைவர்
**இராம.வேதநாயகம்**

# தினம் ஒரு தலைவர்கள் ஸ்டாலின் சீனிவாசன் வரலாறு

**வாழ்க்கைக் குறிப்பு**
ஸ்டாலின் சீனிவாசன் மே 30, 1899-ல் தஞ்சை மாவட்டம் சீர்காழியில் பிறந்தார். தந்தை பெயர் குப்புசாமி. தொடக்கக் கல்வியை சீர்காழியில் பயின்றார். சட்டத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார். சென்னை பிரசிடென்சி கல்லூரியில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

**தனிவாழ்க்கை**
ஸ்டாலின் சீனிவாசன் தேசியப் பள்ளியில் பணிபுரிய சி. ராஜகோபாலாச்சாரியால் அழைக்கப்பட்டார். சுதந்திரத்திற்குப் பின் மெட்ராஸின் முதல் தலைமை திரைப்படத் தணிக்கை அதிகாரியாக மூன்று வருடங்கள் பணியாற்றினார். 'பராசக்தி' படம் வெளிவரக் காரணமாக இருந்தார். அதன்பின் சினிமா உற்பத்தியாளர் சங்கத்தின் காரியதரிசியாகப் பணியாற்றினார்.

குற்றவியல் வழக்கறிஞர் ராதா சீனிவாசன் ஸ்டாலின் சீனிவாசனின் மகள்.

**பெயர்க்காரணம்**
இதழியல் வரலாற்றில் மூன்று சீனிவாசன்கள் இருந்தனர். இந்து இதழின் ஆசிரியர் கஸ்தூரி சீனிவாசன். சுதேசமித்திரன் ஆசிரியர் சி.ஆர். சீனிவாசன், கு. சீனிவாசன். முதல் இரு சீனிவாசன்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட கு. சீனிவாசனை ஸ்டாலின் சீனிவாசன் என்று அழைத்தனர். சீனிவாசனுக்கு சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் தலைவர் ஸ்டாலின் போன்ற மீசை இருந்ததால் இந்தப் பெயர் பெற்றார். ஆனால் இதற்கும் கு. சீனிவாசனின் கொள்கைக்கும் தொடர்பு இல்லை. கு. சீனிவாசன் கம்யூனிசத்தை ஏற்காதவர்.

**இதழியல்**
**தொடக்க காலம்**
ஸ்டாலின் சீனிவாசன் 'டெய்லி எக்பிரஸ்' என்ற ஆங்கில நாளிதழில் தன் இதழியல் பணியைத் தொடங்கினார். 'சன்', 'டான்' ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளில் பணிபுரிந்தார்.
அவரது எழுத்துக்கள் காங்கிரஸ் இயக்கத்தின் கொள்கைகளைப் பிரதிபலித்தன.

பம்பாயில் எஸ். சதானந்தின் சுதேசி செய்தி நிறுவனமான 'தி ஃப்ரீ பிரஸ் ஜர்னல்' என்னும் (THE FREE PRESS OF INDIA NEWS AGENCY) ஆங்கில நாளேட்டின் செய்தி நிருபராகச் சேர்ந்தார். சீனிவாசனின் கட்டுரையை வெளியிட்டதற்காக சதானந்தன் சிறையில் அடைக்கப்பட்டபோது சதானந்தை விடுவிக்க நீதிமன்றம் சென்றார். காங்கிரஸ் இயக்கத்தின் பிரசாரக் கருத்துக்களை தனது எழுத்தில் முன்நிறுத்திய சீனிவாசனை, ஆட்சிக்கு குந்தகம் விளைவிப்பதாக குற்றம் சாட்டி நாசிக் சிறையில் அடைத்தது பிரிட்டிஷ் அரசு

**சிறையிலிருந்து**
வெளிவந்தபின் பம்பாயில் 'பம்பாய் ஸ்டாண்டர்ட்' எனும் ஆங்கில வார இதழையும் தொடங்கி சில காலம் நடத்தினார். 1922-ல் சென்னையில் டி. பிரகாசம் 'ஆந்திரகேசரி'யையும், காந்தியத்தைப் பரப்ப 'ஸ்வராஜ்யா' எனும் ஆங்கில இதழையும் தொடங்கிய போது அதில் தொண்டாற்றிய இளம் எழுத்தாளர்களில் (ஜி.வி. கிருபாநிதி, காசா சுப்பாராவ், கே.ராமகோடீஸ்வரராவ், என்.எஸ். வரதாச்சாரி) சீனிவாசனும் ஒருவர். தமிழில் வெளிவந்த 'ஸ்வராஜ்யா' இதழிலும் பங்காற்றினார்.

**மணிக்கொடி**
நாசிக் சிறைவாசம் சீனிவாசனைப் பற்றிய நாடு தழுவிய கவனத்தை உண்டாக்கியது. அவரது எழுத்துக்கு வரவேற்பும், மதிப்பும் கூடியது. விடுதலை செய்யப்பட்ட சில மாதங்களில் மும்பையில் இருந்து சென்னைக்கு வந்தார் சீனிவாசன். தன் கருத்தொத்த நண்பர்களான வ.ராமசாமியையும், டி.எஸ். சொக்கலிங்கத்தையும் சந்தித்தார். மற்றவர்களின் இதழ்களில் பணியாற்றுவதை விட நாமே ஏன் ஒரு இதழைத் தொடங்ககூடாது என்ற கேள்வியை முன்வைத்து மூவரும் விவாதித்து, முடிவில் இலக்கியம் சார்ந்தும், சமகால சமூக பிரச்னைகளை முன்னிறுத்தியும் ஒரு இதழ் தொடங்க முடிவெடுத்தனர். லண்டனில் இருந்து வெளிவந்த சண்டே அப்சர்வர் இதழை ஒத்து மணிக்கொடி சிற்றிதழை செப்டம்பர் 17, 1933-ல் தொடங்கினர்.

**தொடக்கத்தில்**
மணிக்கொடிக்கு ஓரளவுக்கு வரவேற்பு கிடைத்தாலும் தொடர்ந்து நடத்துமளவுக்கு பொருளாதாரப் பின்புலம் இல்லாததால் ஆறு மாதத்திலேயே தள்ளாடத் தொடங்கியது. ஆனால் சீனிவாசன் இதழைத் தொடர்ந்து நடத்துவதில் உறுதியாக இருந்தார். மணிக்கொடியை வ.ரா, சொக்கலிங்கம் ஆகியோரின் பொறுப்பில் விட்டுவிட்டு மும்பைக்கு சென்ற சீனிவாசன் அங்கு ஆங்கில இதழ்களில் கட்டுரைகள் எழுதி ஈட்டிய பணத்தை மணிக்கொடி இதழை நடத்த அனுப்பினார். இவ்வாறு இரு மணிக்கொடி இதழ்கள் வெளிவந்தன. இடையே, சொக்கலிங்கத்துக்கும், வ.ராவுக்கும் கருத்து மோதல் ஏற்பட்டது. வ.ரா மணிக்கொடியில் இருந்து விலகி, வீரகேசரி இதழில் பணியாற்ற கொழும்பு சென்றார். சிறிது காலத்திலேயே சொக்கலிங்கமும் மணிக்கொடியில் இருந்து விலகி தினமணி இதழின் ஆசிரியராகி விட்டார். மும்பையில் இருந்த சீனிவாசன், இனிமேல் மணிக்கொடியை நடத்துவது சாத்தியமில்லை என்று உணர்ந்து அந்த இலட்சிய இதழை நிறுத்திவிட்டார்.

புதிய படைப்பாளிகளை தமிழ் இலக்கியத்துக்கு அறிமுகப்படுத்தியது மணிக்கொடியின் பிரதான சாதனைகளில் குறிப்பிடத்தகுந்த ஒன்று. மணிக்கொடியில் சீனிவாசனின் எழுத்துக்களைப் பற்றிய விவரங்களை அறிய முடியவில்லை. சீனிவாசன் பம்பாய்க்குப் போன பிறகு மணிக்கொடியில் அரசியலின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது.
மணிக்கொடி பல தேக்கங்களையும் மாறுதல்களையும் கண்டு நின்றுவிட்டது.



இந்தியன் பார்லிமண்ட்
ஸ்டாலின் சீனிவாசன் 1946-47-களில் 'இந்தியன் பார்லிமண்ட்' எனும் திங்கள் இதழையும் நடத்தினார். இதில் 'தனிஷ்டா' என்னும் புனைப்பெயரில் எழுதினார். இப்பத்திரிக்கை சில இதழ்களே வெளிவந்தது. பார்லிமெண்ட் என்ற சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என அரசு தடை விதித்தது. மேலும் இவர் என்னென்ன புனைப்பெயர்களில் எழுதினார் என்ற விவரம் சரிவர இல்லை.

**அரசியல் வாழ்க்கை**
ஸ்டாலின் சீனிவாசன் காங்கிரஸ் மகாசபை கூட்டங்கள், சத்தியாகிரங்கள் பற்றிய செய்திகளை பத்திரிக்கையில் விரிவாக வெளியிட்டார். காந்தியுக காங்கிரஸில் பங்கேற்றார். காங்கிரஸ் பிரச்சாரத்திற்காக மறைமுகமாக துண்டு பிரசுரங்களை வெளியிட்டதற்காக 1932-ல் கைது செய்யப்பட்டார். நாசிக் சிறையில் பதினைந்து மாதங்கள் இருந்தார். அங்கு ஜெயப்பிரகாஷ் நாராயணின் தொடர்பு ஏற்பட்டது.

**இலக்கிய வாழ்க்கை**
ஸ்டாலின் சீனிவாசன் சங்க இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். தம் கட்டுரைகள், நேர்ப்பேச்சில் சங்க இலக்கியங்களை உதாரணம் காட்டுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பாரதியின் மேல் பற்று கொண்டிருந்தார். பாரதி பற்றிய கட்டுரைகள் எழுதினார். பாரதியின் குயில் பாட்டிற்கு விளக்கம் அளித்துள்ளார். பாரதியின் படைப்புகள் சார்ந்த தன் விளக்கங்களைக் கட்டுரைகளாக எழுதினார். நாசிக் சிறையில் அடைக்கப்பட்டபோது தத்துவமேதை பிளேட்டோவின் தத்துவங்களை மொழிபெயர்த்தார். அரசியல், சமூகம் சார்ந்து சில நூல்கலையும் எழுதினார்.

**வெள்ளிவிட்டக் கூட்டம்**
1963 காலகட்டத்தில் ஸ்டாலின் சீனிவாசன் வீட்டில் ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளிக்கிழமை இலக்கியக் கூட்டம் நடைபெற்றது. அதில் தி. ஜானகிராமன், சிட்டி ஆகியோர் கலந்து கொண்டனர். வெள்ளிவட்டக் கூட்டத்தில் இருபது முப்பது பேர் கலந்து கொள்வர். கூட்டத்திற்கு ஆலோசகராகவும், அவற்றை நடத்துபவராகவும் சிட்டி இருந்தார்.

இலக்கிய இடம்
"ஃப்ரீ பிரஸ் ஜர்னலில் சீனிவாசன் எழுதிய தலையங்கம் ஒவ்வொன்றும் ஒரு சிறந்த இலக்கியக்கட்டுரை. அவற்றின் நடை, சொல்லாட்சி, கருத்து ஆழம், சிந்தனை உயர்வு, உணர்ச்சிவேகம் யாவும் இலக்கியத்தரத்தில் இருந்தன. படிப்பவர் உள்ளத்தில் விடுதலை ஆர்வம் கொப்பளித்துப் பொங்கும் விசையுடன் எழுதப்பட்ட வியப்பிற்குரிய இலக்கியக் கட்டுரைகள் இவை. இலக்கியம், ஆன்மிகத்துறைகளில் பாரதி நடையின் இசை, இன்பம், உணர்ச்சி, ஆவேசம், கருத்து ஆழம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டவர் மணிக்கொடி சீனிவாசன்" என பி.எஸ். ராமையா குறிப்பிட்டார்.

**மறைவு**
ஸ்டாலின் சீனிவாசன் ஜூன் 2, 1975-ல் காலமானார்.

**நூல் பட்டியல்**
இவரைப்பற்றிய நூல்கள்
மணிக்கொடி சீனிவாசன் எழுத்துக்கள் (ஜெயதேவ் சீனிவாசன்) (கவிதா பதிப்பகம்)

# நீண்ட தூர ரயில்களில் தொடர் தூய்மைப் பணிக்கு புதிய திட்டம்: அஸ்வினி வைஷ்ணவ்!

**புதுடெல்லி, பிப்.16:**

'நீண்ட தூர ரயில்களில் அனைத்து பெட்டிகளிலும் தொடர்ச்சியான தூய்மைப் பணியை மேற்கொள்ளும் வகையில் தொழில்நுட்ப ரீதியில் நிபுணத்துவம் பெற்ற தனியார் நிபுணர் குழுக்கள் பணியமர்த்தப்பட உள்ளனர்' என்று ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இதுகுறித்து தில்லியில் சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது: பயணிகளின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப ரயில் பெட்டிகளை தூய்மையாக பராமரிக்கக் கூடிய வகையில் நிபுணத்துவம் பெற்ற, சுய ஒழுக்கமும் முனைப்புடனும் செயல்படக் கூடிய ஊழியர்களைக் கொண்டு இச் சேவையை வழங்கும் நிறுவனங்கள் இந்த தூய்மைப் பணியில் பணியமர்த்தப்படும்.

தற்போது நடைமுறையில் உள்ள ரயில்தூய்மை திட்டத்தின் கீழ், அதன் வழித்தடத்தில் உள்ள நிர்ணயிக்கப்பட்ட ரயில் நிலையத்தில் ரயில் பெட்டிகள் தூய்மை செய்யப்படும்.

ஆனால், புதிய திட்டத்தின்படி, ரயில் பயணம் முழுவதும் குறிப்பிட்ட நேர இடைவெளியில் அல்லது தேவைப்படும்போதெல்லாம் ரயில்களில் பணியில் இருக்கும் பணியாளர்கள் தூய்மைப் பணியை மேற்கொள்வர். பொதுப் பெட்டி உள்பட அனைத்துப் பெட்டிகளிலும் தூய்மைப் பணியை அவர்கள் மேற்கொள்வர். பயணிகள் பெட்டிகள், கழிவறைகள், கை கழுவும் தொட்டி, குப்பைகள் சேகரிப்பு, சிறு கோளாறுகளை சரிசெய்தல், ரயில்களில் தண்ணீர் நிரப்புதல் உள்ளிட்ட பணிகளை இந்தப் பணியாளர்கள் மேற்கொள்வர். இந்தத்தூய்மைப் பணி கண்காணிப்பு, கருத்து கேட்பு மற்றும் பணியாளர்களின் செயல்பாடுகள் மேலாண்மை உள்ளிட்டவை தொழில்நுட்ப உதவியுடன் நிகழ்நேர அடிப்படையில் மேற்கொள்ளப்படும். முதல்கட்டமாக இத்திட்டத்தை செயல்படுத்த 80 நீண்ட தூர ரயில்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில் பெறப்படும் அனுபவத்தின் அடிப்படையில், மற்ற நீண்ட தூர ரயில்களிலும் இத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றார்.

# நிசார் செயற்கைக்கோள் மூலம் 12 நாள்களுக்கு ஒருமுறை மண் ஈரப்பத தரவுகள்: இஸ்ரோ

**புதுடெல்லி, பிப்.16:**



இந்திய நிலப்பரப்பில் மண்ணின் ஈரப்பதத்தை ஆய்வு செய்து 12 நாள்களுக்கு ஒருமுறை நிசார் செயற்கைக்கோள் தரவுகளை வெளியிடவுள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) சனிக்கிழமை தெரிவித்தது.

இஸ்ரோ-நாசா கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான நிசார் கடந்த ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது.

புவியின் மேற்பரப்பு மாற்றங்கள், பருவநிலை மாற்றங்கள் உள்ளிட்டவை குறித்து இந்த செயற்கைக்கோள் ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

இதன் செயல்பாடுகள் குறித்து இஸ்ரோ சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'எஸ் பேண்ட் மற்றும் எல் பேண்ட் ஆகிய இரு அலைவரிசைகளையும் பயன்படுத்தி இந்திய நிலப்பரப்பை துல்லியமாக அளவிட்டு 100 மீட்டர் வரை மண்ணின் ஈரப்பதம் குறித்து 12 நாள்களுக்கு ஒருமுறை இரு தரவுகளை நிசார் வெளியிடவுள்ளது.

வேளாண்மை, நீர் பராமரிப்பு, பயிர்கள் மற்றும் வறட்சி பாதிப்புகளைக் கண்டறிவதில் மண்ணின் ஈரப்பதம் முக்கியக் காரணியாக விளங்குகிறது.

நிசார் வெளியிடும் தரவுகள் மூலம் நீர்ப்பாசன சமவெளிகள் முதல் வட-பாலைவன மற்றும் அதிக மழைப்பொழிவு மண்டலங்கள் எனஇந்திய வேளாண்-பருவமண்டலங்களை துல்லியமாக மதிப்பிட முடியும்.

இது வேளாண் திட்டமிடல் மற்றும் விவசாயிகளுக்குப் பயன்படுவதோடு வறட்சியை எதிர்கொள்வதற்கான செயல்திட்டத்தை தீட்டவும் பயன்படவுள்ளது. இதற்கான தொழில்நுட்பம் இஸ்ரோவின் விண்வெளி செயல்பாடுகள் மையத்தில் வடிவமைக்கப்பட்டன' எனத் தெரிவிக்கப்பட்டது.

# ஜம்முவில் குடிநீர் வரி செலுத்தாத அரசு ஊழியருக்கு சம்பளம் 'கட்'!

**ஜம்மு, பிப்.16:**

ஜம்மு பகுதியில் குடிநீர் வரி செலுத்தாத அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாது என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

ஜம்மு காஷ்மீரில் சுமார் 15.64 லட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. அதாவது 81.22 சதவீத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பெரும்பாலானோர் முறையாக குடிநீர் வரியை செலுத்தவில்லை என்று கூறப்படுகிறது. குறிப்பாக அரசு ஊழியர்களும் வரியை செலுத்தவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. இந்த சூழலில் ஜம்மு பிராந்திய அரசு நிர்வாகம் அண்மையில் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டு உள்ளது. இதன்படி, "குடிநீர் வரி நிலுவை இல்லை" என்று ஜல் சக்தி துறையிடம் இருந்து அரசு ஊழியர்கள் தடையில்லா சான்றை பெற்று அவர்கள் சார்ந்த துறையிடம் சமர்ப்பிக்க வேண்டும். அப்போதுதான் சம்பளம் வழங்கப்படும். இல்லையென்றால் சம்பளம் வழங்கப்படாது என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# எம்பிபிஎஸ் சீட் கிடைக்காததால் வாதாடிய மாணவன்: 7 நாளில் இடம் ஒதுக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

**ஜபல்பூர், பிப்.16:**

மத்திய பிரதேசம் ஜபல்பூரைச் சேர்ந்தவர் அதர்வா சதுர்வேதி (19), நீட் தேர்வில் 530 மதிப்பெண் பெற்றார். பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரான (இடபிள்யூஎஸ்) அவருக்கு, அந்த பிரிவில் மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்கப்படவில்லை. ம.பி.யில் இடபிள்யூஎஸ் பிரிவில் தனியார் மருத்துவக் கல்லூரியில் நீட் அடிப்படையில் மாணவர் சேர்க்கை தொடர்பான அரசாணை வெளியிடப்படாததே இதற்குக் காரணம். இதனால் அதர்வா, தனது தந்தை வழக்கறிஞர் மனோஜ் சதுர்வேதியின் துணையுடன் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனுவை (SPECIAL LEAVE PETITION SLP) ஆன்-லைனில் தாக்கல் செய்தார். சிறப்பு அனுமதி மனு என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 136-ன் கீழ், கீழ் நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்களின் உத்தரவுகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய அனுமதி கோரும் ஒரு சட்ட நடவடிக்கையாகும். இந்த மனு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தான் வாதிட 10 நிமிட அவகாசத்தை மட்டுமே கோரினார் அதர்வா. இடபிள்யூஎஸ் பிரிவில் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை அமல்படுத்த நீதிமன்றம் உத்தரவிடுவதற்கான காரணங்களை அதர்வா அடுக்கினார். அவரது கோரிக்கையை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இதையடுத்து அரசியலமைப்பு சட்டத்தில் 142-வது பிரிவின் கீழ் தனக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, அதர்வாவுக்கு அடுத்த 7 நாட்களுக்குள் எம்பிபிஎஸ் சேர்க்கை வழங்குமாறு தேசிய மருத்துவ ஆணையத்துக்கும், மத்திய பிரதேச அரசுக்கும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# மேற்கு வங்கம்: வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாதோரின் அடையாளப் பதிவு நிறைவு!

**புதுடெல்லி, பிப்.16:**

மேற்கு வங்கத்தில் வரைவுவாக்காளர் பட்டியலில் இடம்பெறாதவர்களை நேரில் வரவழைத்து, அவர்களின் அடையாளத்தைப் பதிவு செய்யும் நடைமுறை சனிக்கிழமை நிறைவடைந்தது. பிப்.28-இல் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பரில் வெளியிடப்பட்ட மேற்கு வங்க வரைவுவாக்காளர் பட்டியலில் இருந்து இறந்தவர்கள், போலி வாக்காளர்கள், வீடு மாறியவர்கள் என சுமார் 58 லட்சம் பேர் நீக்கப்பட்டனர்.

பட்டியலில் இடம்பெறாதவர்கள் நேரில் சென்று தேர்தல் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கும் அடையாள ஆவணங்கள் மூலம், அவர்கள் தகுதி வாய்ந்த வாக்காளர்களா என்பதை சரிபார்த்தல், அவர்களின் பெயரில் உள்ள எழுத்துப் பிழைகளால் ஏற்பட்ட குளறுபடிகளை சரிசெய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒன்றரை மாதங்களாக நடைபெற்று வந்த இந்தப் பணி சனிக்கிழமை நிறைவடைந்தது.

அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் பிப்.21 வரை பரிசீலனை செய்யப்படும் என்று தேர்தல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னதாக மாநிலத்தில் பிப்.14-ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அதை பிப்.28-ஆம் தேதிக்கு தேர்தல் ஆணையம் மாற்றியது.

# அந்நியச் செலாவணி கையிருப்பு 71,706.4 கோடி டாலராக சரிவு!

**புதுடெல்லி, பிப்.16:**



இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு பிப். 6-ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 71,706.4 கோடி டாலராக குறைந்துள்ளது.

இது குறித்து ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிப்பதாவது:

நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு கடந்த 6-ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 671.1 கோடி டாலர் சரிந்து, 71,706.4 கோடி டாலராக உள்ளது.

இதற்கு முந்தைய வாரத்தில், அது 1,436.1 கோடி டாலர் அதிகரித்து 72,377.4 கோடி டாலர் என்ற புதிய உச்சத்தை எட்டியிருந்தது.

பிப். 6-ஆம் தேதியுடன் நிறைவடைந்த மதிப்பீட்டு வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பின் முக்கிய அங்கமான அந்நிய நாணய சொத்துகள் 766.1 கோடி டாலர் அதிகரித்து, 57,005.3 கோடி டாலராக உள்ளது.

டாலர் அல்லாத யூரோ, பவுண்டு, யென் போன்ற பிற செலாவணிகளின் கையிருப்பில் ஏற்படும் மதிப்பு ஏற்ற, இறக்கங்கள் டாலர் மதிப்பில் கணக்கிடப்படுவது அந்நிய நாணய சொத்துகளாகும். மதிப்பீட்டு வாரத்தில் இந்தியாவின் தங்கம் கையிருப்பு 1,420.8 கோடி டாலர் சரிந்து, 12,347.6 கோடி டாலராக உள்ளது.

சிறப்பு வரைவு உரிமைகள் (எஸ்டிஆர்) 13.2 கோடி டாலர் சரிந்து 1,882.1 கோடி டாலராக உள்ளது. சர்வதேச நிதியத்தில் (ஐஎம்எஃப்) இந்தியாவின் கையிருப்பு மதிப்பீட்டு வாரத்தில் 3.2 கோடி டாலர் சரிந்து 471.5 கோடி டாலராக உள்ளது என்று ரிசர்வ் வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

# பிரிட்டன் வீரர்களுக்கு இந்திய விமானப் படை பயிற்சி

**புதுடெல்லி,பிப்.16:**

வரலாற்றில் முதன்முறையாக இந்திய விமானப் படை அதிகாரிகள் பிரிட்டனில் உள்ள ராயல் ஏர் ஃபோர்ஸ் (ஆர் ஏஎஃப்) வேலி தளத்தில் அந்நாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்க உள்ளனர்.

இதுகுறித்து பிரிட்டன் தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்திய விமானப்படையைச் சேர்ந்த 3 தகுதிவாய்ந்த விமானப் பயிற்றுநர்கள் பிரிட்டனின் ஆர்ஏஎப் வேலி தளத்திற்கு அனுப்பப்பட உள்ளனர். இது பிரிட்டனின் அதிவேக ஜெட் விமானிகளுக்கான முதன்மைப் பயிற்சி தளமாகும். தொடக்கத்தில் இரண்டு ஆண்டு காலத்திற்கு இந்திய அதிகாரிகள் அங்கு பணியமர்த்தப்படுவார்கள்.

அவர்கள் "பிஏஇ ஹாக் டி2' அல்லது 'டெக்சன் டி1' ரக விமானங்களில் பயிற்சி அளிப்பார்கள். இந்தப் பணியின் போது, இந்திய அதிகாரிகள் பிரிட்டன் தளபதிகளின் கீழ் பணியாற்றினாலும், அவர்கள் இந்திய விமானப்படையின் கட்டுப்பாட்டிலேயே இருப்பார்கள். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாநில கிரிக்கெட் சங்கங்கள் சீர்திருத்தங்களை முன்மொழிவது அவசியம்: உச்சநீதிமன்றம்!

**புதுடெல்லி பிப்.16:**

மாவட்ட கிரிக்கெட் சங்க உறுப்பினர்களின் வாக்குரிமை தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் திருச்சி மாவட்ட கிரிக்கெட் சங்கம் மேல்முறையீடு செய்தது.

இந்த மனுவை உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ்.நரசிம்மா மற்றும் அலோக் ஆராதே ஆகியோர் அடங்கிய அமர்வு வெள்ளிக்கிழமை விசாரித்தது.

அப்போது நீதிபதிகள் அமர்வு கூறியதாவது: விளையாட்டின் முக்கியத்துவம் கருதி மாவட்ட கிரிக்கெட் சங்கங்களில் முறையாக செயல்பாடு, வெளிப்படையான நிர்வாகம் இருப்பதை உறுதிசெய்ய மாநில கிரிக்கெட் சங்கங்கள் சீர்திருத்தங்களை முன்மொழிவது அவசியம். சிறந்த நிர்வாகம், மேலாண்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் உட்பூசல்களை களைந்து ஒன்றிணைந்து பணியாற்ற மாவட்ட சங்கங்களும் தாமாகவே சில சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

விளையாட்டு என்பது சமூகம், மொழி மற்றும் கலாசார பின்னணிகளை கடந்து சகோதரத்துவமனப்பான்மையை வளர்க்கும் தன்மையுடையது. களத்தில் விளையாடும்போது தங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை புறந்தள்ளி ஒருமித்த சிந்தனையை விதைக்கும் வலிமை விளையாட்டுக்கு உள்ளது. இனம், ஜாதி, மதம், பாலினம் அல்லது பொருளாதார நிலை என அனைத்தையும் தாண்டி விளையாட்டு அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்கக்கூடியது. விளையாட்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் விளையாட்டுகளை கற்றுத் தருவதோடு மட்டுமல்லாமல் நிர்வாக அணுகலையும் எளிமையாக்க வேண்டும்.

விளையாட்டுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் நகரங்களில் வசிக்கும் வசதி படைத்த சிலருக்கு மட்டுமே கிடைப்பதாக இருக்கக்கூடாது. விளையாட்டு போட்டிகளில் கிடைக்கும் வருவாய், அறிவுசார் சொத்துரிமை மற்றும் ஊடக உரிமைகள் ஆகியவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

மனுதாக்கல் செய்துள்ள சங்கத்தின் உறுப்பினர்கள் சேர்க்கை தொடர்பான விவகாரம் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் அதற்கு விரைவில் தீர்வுகாண அறிவுறுத்துகிறோம் என்றனர்.

# ரூ.3.32 லட்சம் கோடியில் ஆந்திர பட்ஜெட் தாக்கல்

**அமராவதி, பிப்.16:**

ஆந்திர மாநில நிதி அமைச்சர் வி.கிஷோர் நேற்று சட்டப் பேரவையில் ரூ.3,32,205 கோடியில் 2026-27 ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்தார்.

இதில், ரூ.6 ஆயிரம் கோடி அமராவதி தலைநகர பணிகளுக்காகவும், மின்வாரியத்திற்கு ரூ.13,934 கோடியும், சாலை, துறைமுகம் மற்றும் விமான நிலையங்கள் அமைக்க ரூ.13,546 கோடியும், தொழிற்சாலை பணிகளுக்கு ரூ.3,161 கோடியும், விசாகப்பட்டினம் வளர்ச்சி பணிகளுக்கு ரூ.28,000 கோடியும், ராயலசீமா குளோபல் தோட்டக்கலை கிளப்புக்கு ரூ.30,000 கோடியும், வேளாண்மை மற்றும் அதன் துணை துறைகளுக்கு ரூ. 13,598 கோடியும், போலவரம் அணைக் கட்ட ரூ.6,105 கோடியும், உள் துறைக்கு ரூ.9,165 கோடியும், மதிய உணவு திட்டத்திற்கு ரூ.2,161 கோடியும், பள்ளிகல்வித் துறைக்கு ரூ.32,308 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

டிஜிட்டல் கைதுகள், ஆன்லைன் மோசடிகளை முழுமையாக ஒழிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சைபர் கிரைம் காவல் நிலையங்கள் அமைக்கப்படும் என பட்ஜெட் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

பெண்கள் பாதுகாப்புக்கு 'சக்தி' மொபைல் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புகார் செய்த 7 நிமிடங்களில் போலீஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்துவர் என்றும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

# போலீஸாரின் வீடுகளை மட்டுமே குறி வைத்த திருடன்



**போபால், பிப்.16:**

ம.பி.யின் காண்டவா நகரின் போலீஸ் லைன் பகுதியில் காவல் துறையினரின் வீடுகள் உள்ளன. இங்கு கடந்த ஜனவரி 20-ம் தேதி இரவு இரு காவலர்களின் வீடுகளில் பல லட்சம் மதிப்புள்ள நகைகள் மற்றும் பணம் திருடுபோனது. இது தொடர்பாக சிசிடிவி பதிவுகளின் அடிப்படையில் அலிராஜ்பூர் மாவட்டத்தை சேர்ந்த தீபேஷ் என்பவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக போலீஸ் அதிகாரிகள் கூறியதாவது: சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் அலிராஜ்பூரில் போலீஸ்காரர் ஒருவரால் தீபேஷ் தாக்கப்பட்டார். அப்போது முதல் அவர் போலீஸாரின் வீடுகளை மட்டுமே குறிவைத்து திருடி வந்துள்ளார். திருடுவதற்கு முன் தெரு வியாபாரி போல் காட்டிக்கொண்டு உளவு பார்ப்பதை இவர் வழக்கமாக கொண்டிருந்தார். ஜாபுவா, அலிராஜ்பூர், தார் என பல மாவட்டங்களில் அவர் இந்த குற்றத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்.

தலைமறைவான தீபேஷின் கூட்டாளிகளான ரமேஷ், புராலியாவை தேடி வருகிறோம். இவ்வாறு போலீஸார் கூறினர்.

# புத்தாக்க தொழில் தொடங்க மத்திய, மாநில அரசுகள் உதவி: மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங்

**புதுடெல்லி, பிப்.16:**



புத்தாக்க தொழில் நிறுவனங்களை (ஸ்டார்ட் அப்) தொடங்க முன்வருவோருக்கு மத்திய, மாநில அரசுகள் தேவையான உதவிகளைச் செய்யும் என்றார் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங்.

இந்திய தொழிலக ஆராய்ச்சி கவுன்சில் (சிஎஸ்ஐஆர்) சார்பில் தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்தும் பொருட்டு, ஆராய்ச்சி-தொழில்-புதுயுகத் தொழில்முனைவு இரு நாள் மாநாட்டை சென்னை வர்த்தக மையத்தில் மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் சனிக்கிழமை தொடங்கி வைத்துப் பேசியதாவது:

மத்திய அரசு தொழில் துறையில் வளர்ச்சி அடையும் நோக்கில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு இந்த பட்ஜெட்டில் ரூ.10,000 கோடி வளர்ச்சி நிதி ஒதுக்கியுள்ளது. அது மட்டுமல்லாது புத்தாக்க தொழில் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் புதிய விஷயங்களை தெரிந்துகொள்ள வேண்டும். புதிதாக புத்தாக்க தொழில் தொடங்க முன்வருபவர்களுக்கு தொழில் துறையைச் சேர்ந்த முன்னணி தலைவர்கள் உதவி செய்யத் தயாராக உள்ளனர். இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

# பிஹாரில் விஷம் அருந்திய 4 சிறுமிகள் உயிரிழப்பு

**பாட்னா, பிப்.16:**

பிஹாரில் அவுரங்காபாத் மாவட்டம், மோட்டி பிஹா என்ற கிராமத்தில் 12 முதல் 15 வயதுக்கு உட்பட்ட 5 சிறுமிகள் அண்மையில் வயல்வெளிக்கு சென்றனர். இவர்களில் 14 வயது சிறுமி மட்டும் பதைபதைக்க வீட்டுக்கு ஓடி வந்தார். அவர் கூறியதை கேட்டு கிராம மக்கள் அதிர்ச்சியடைந்தனர். ஹெரான் எனும் பறவையை கொல்ல பயன்படுத்தும் விஷத்தை பரிசோதனை முயற்சியாக அருந்தியதில் 4 தோழிகளும் தனது கண் முன்னே சரிந்து விழுந்ததாகவும் தான் மட்டும் கொஞ்சமாக குடித்துப் பார்த்து பிறகு துப்பிவிட்டதாகவும் அச்சிறுமி கூறினார். இதையடுத்து கிராம மக்கள் வயல்வெளிக்கு ஓடிச் சென்றபோது, 4 சிறுமிகளும் இறந்து கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இதற்கிடையில் வீடு திரும்பிய சிறுமியை காப்பாற்றும் முயற்சியாக அவருக்கு வாந்தியை வரவழைக்க வேப்பிலை சாறு கொடுத்தனர். இதில் உயிர் தப்பிய சிறுமி கூறுகையில், "அதை (விஷத்தை) சாப்பிட்ட பிறகு நாம் வாழ்கிறோமா அல்லது இறக்கிறோமா என்று பார்க்கலாம் என்று தோழி ஒருவர் கூறினார். என்றார். இதுகுறித்து போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.




# சென்னையில் நடிகர் மன்சூர் அலிகான் மகன் கார் விபத்தில் காயம்



**சென்னை, பிப்.16:** நுங்கம்பாக்கத்தில் நடிகர் மன்சூர் அலிகான் மகன் ஓட்டி சென்ற கார், மரத்தில் மோதி விபத்துக்குள் ளானது. இந்த விபத்தில், லேசான காயத்துடன் அவர் உயிர்தப்பினார்.

சென்னை, நுங்கம்பாக் கத்தைச் சேர்ந்தவர் துக்ளக் (27). பிரபல நடிகர் மன்சூர் அலிகானின் மகனான இவர், திரைப்படத் துறையில் உதவி இயக்குநராகப் பணி யாற்றி வருகிறார். நேற்று முன்தினம் இரவு 11 மணி அளவில், நுங்கம்பாக்கம் ஹாடோஸ் சாலையில் இருந்து உத்தமர் காந்தி சாலை நோக்கி துக்ளக் தனது காரில் சென்று கொண்டிருந்தார். கார் அதிவேகத்தில் சென்றதாகக் கூறப்படுகிறது.

கட்டுப்பாட்டை இழந்த கார்: ஹாடோஸ் சாலையில் இருந்த வேகத்தடையை கவனிக்காமல் அவர் காரைச் செலுத்தியதால், நிலை தடுமாறிய கார் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியது. இறுதியில், அச்சாலையில் உள்ள ஓட்டல் எதிரே இருந்த மரத்தில் பலமாக மோதி கவிழ்ந்தது.

விபத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள், உடனடியாக ஓடிச்சென்று காரினுள் சிக்கியிருந்த துக்ளக்கை மீட்டனர். தகவல் அறிந்து விரைந்து வந்த நுங்கம்பாக்கம் போலீஸார், லேசான காயங்களுடன் உயிர் தப்பிய அவரை சிகிச்சைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து குறித்து திருவல்லிக்கேணி போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை மேற்கொண்டனர். வேகத்தடையை கவனிக்காமல் அதிவேகமாகச் சென்றதே விபத்துக்கு முக்கியக் காரணம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஏற்கெனவே, கடந்த 2024-ம் ஆண்டு, போதைப் பொருள் வழக்கு ஒன்றில் துக்ளக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது இந்த விபத்து தொடர்பாக போலீஸார் மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கலைஞர் நூற்றாண்டு பூங்காவில் லிஃப்ட் கேபிள் அறுந்து 5 தொழிலாளர்கள் படுகாயம்

**சென்னை, பிப்.16:** கலைஞர் நூற்றாண்டு பூங்காவில் உயர்கோபுரம் கட்டுமான பணியின் போது லிஃப்ட் கேபிள் அறுந்து 5 தொழிலாளர்கள் படுகாயம் அடைந்தனர்.

சென்னை, கதீட்ரல் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்காவில், தற்போது உயர் கோபுரம் அமைக்கும் கட்டுமானப் பணிகள் நடை பெற்று வருகின்றன. இதில் பல்வேறு மாவட்டத்தை சேர்ந்த தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினம் மாலை கட்டுமானப் பொருட்களை மேலே கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்டிருந்த தற் காலிக லிஃப்ட் மூலம், 5 தொழிலாளர்கள் பொருட்களுடன் மேலே சென்று கொண்டிருந்தனர்.

சுமார் 20 அடி உயரத்தில் லிஃப்ட் சென்றபோது, எதிர்பாராத விதமாக அதன் கேபிள் கம்பி அறுந்து லிஃப்ட் கீழே விழுந்ததில், அதில் இருந்த தொழிலாளர்கள் 5 பேரும் பலத்த காயமடைந்து அலறினர். சத்தம் கேட்டு ஓடிவந்த சக தொழிலாளர்கள், உடனடியாக ராயப்பேட்டை காவல்துறைக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த காவல் துறையினர், காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இதுகுறித்து போலீஸார் நடத்திய விசாரணையில், படுகாயம் அடைந்தவர்கள் மாரியப்பன் (48), மோகன் (38), மகேந்திரன் (48), சம்பத்குமார் (47), கணேசன் (51) என்பதும், இவர்கள் அனைவரும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெரிய வந்தது. தற்போது அவர்கள் 5 பேருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்து தொடர்பாக ராயப்பேட்டை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# சென்சஸ் எடுப்பதாக கூறி செயின் பறிப்பில் ஈடுபட்ட பெண் கைது

**திருவள்ளூர், பிப்.16:** புட்லூர் ஏவிஎம் நகர் பகுதியில் சியாமளா (55) என்பவர் வசித்து வருகிறார். இவரது கணவர் ராமு ஓட்டுநராக பணியாற்றி வருகிறார். இந்நிலையில் நேற்று முன்தினம் ராமு வேலைக்கு சென்ற போது வீட்டில் தனியாக இருந்த சியாமளாவிடம் இளம்பெண் ஒருவர் சென்சஸ் எடுப்பதாக கூறி வந்துள்ளார்.



அந்த பெண்ணை சியாமளா வீட்டுக்குள் அழைத்து அவரிடம் பேசி கொண்டிருந்த போது திடீரென அந்த பெண் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சியாமளாவை தாக்கியுள்ளார். மேலும் கத்தியை காட்டி மிரட்டி அவர் கழுத்தில் அணிந்திருந்த தங்க சங்கிலியை பறிக்க முயன்றுள்ளார்.

இந்நிலையில் சியாமளா உடனடியாக வீட்டை விட்டு வெளியேறி, கதவை வெளிப் பக்கமாக பூட்டிவிட்டு கத்தி கூச் சலிட்டுள்ளார். இதையடுத்து அருகில் இருந்தவர்கள் உடனடியாக செவ்வாப்பேட்டை காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார் அந்த பெண்ணை கைது செய்தனர்.

விசாரணையில் அந்த பெண் புட்லூர் எம்ஜிஆர் நகர் பகுதியை சேர்ந்த பவித்ரா என்பதும், கடன் பிரச்சினையை தீர்க்க இதுபோன்று செய்ததாகவும் தெரிந்தது. சியாமளர திருவள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில் வழித்தடம்: அதிவேக சோதனையை அடுத்த வாரம் நடத்த திட்டம்

**சென்னை, பிப்.16:** பூந்தமல்லி - வடபழனி வரை உயர்மட்ட மெட்ரோ ரயில் தடத்தில் அதிவேக சோதனை ஓட்டம் அடுத்த வாரத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.



சென்னையில், 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் கலங்கரை விளக்கம் பூந்தமல்லி வரையிலான 4-வது வழித் தடத்தில் பூந்தமல்லி புறவழிச்சாலை நிலையம்- வடபழனி வரை 14.64 கி.மீ. தொலைவுக்கு உயர்மட்ட பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வழித் தடத்தில் விரைவில் ரயில் போக்குவரத்து சேவையை தொடங்க மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. இதற்காக, இத்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் அனந்த் மதுகர் சவுத்ரி மற்றும் அவரது குழுவினர் கடந்த 11, 12 ஆகிய தேதிகளில் ஆய்வு மேற்கொண்டனர். முதல் நாளில், பூந்தமல்லி- அய்யப்பன் தாங்கல் நிலையம் வரை ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, கட்டுமானப் பணிகள், மின்சாரம், தண்டவாளங்கள் மற்றும் முக்கிய மேம்பால கட்டமைப்புகள் ஆகியவை விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. 2-ம் நாளில் அய்யப்பன் தாங்கல் நிலையம்- வடபழனி மெட்ரோ நிலையம் வரை 8.50 கி.மீ. தொலைவுக்கு ஆய்வு மேற்கொண்டனர்.

3-ம் நாளில் அதிவேக சோதனை ஓட்டம் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 2 நாட்கள் ஆய்வை முடித்து திரும்பி சென்றனர். இந்நிலையில், அடுத்த வாரத்தில் மெட்ரோ ரயில் அதிவேக சோதனை ஓட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.


இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறுகையில், "இத்தடத்தில் மெட்ரோ ரயில் பாது காப்பு ஆணையர் மற்றும் அவரது குழுவினர் ஆய்வு செய்தனர்.

இது அவர்களுக்கு திருப்திகரமாக இருந்தது. தானியங்கி முறையில் மெட்ரோ ரயில் ஓட்டுவது தொடர்பான நிகழ்வுக்கு (புரோகிராம்) ஓர் ஆவணம் தேவைப்படுகிறது.

இதை 3-வது நபர் வழங்க வேண்டும். இந்த ஆவணம் ஓரிரு நாட்களில் கிடைத்து விடும். அதன்பிறகு, பிப்.18-ம் தேதி முதல் 21ம் தேதிக்குள் மீண்டும் பாதுகாப்பு ஆணையர் வந்து,சோதனை ஓட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாதம் இறுதிக்குள் இந்த வழித்தடம் தயாராக இருக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# சாதகமான தீர்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி மூத்த வழக்கறிஞர் ரூ.50 லட்சம் பெற்றதாக குற்றச்சாட்டு

**சென்னை, பிப்.16:** வழக்கில் சாதகமான தீர்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி மூத்த வழக்கறிஞர் ஒருவர் ரூ.50 லட்சம் பெற்றதாக எழுந்த குற்றச்சாட்டின் அடிப்படையில், விசாரணையில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள நீதிபதி, இது தொடர்பாக உயர்நீதிமன்ற ஊழல் தடுப்பு பதிவாளர் விசாரிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.



கடந்த 2008-09ம் ஆண்டில் ஆன்லைன் வர்த்தகத்தில் ஈடுபட்டு, இந்திய உலோகம் மற்றும் கனிமங்கள் வர்த்தக கழகத்தை ரூ.113.38 கோடி அளவுக்கு ஏமாற்றியதாக, சென்னை என்எஸ்சி போஸ் சாலையைச் சேர்ந்த தந்தை, மகனான நரேஷ் பிரசாத் அகர்வால் மற் றும் கணேஷ் அகர்வால் மீது சிபிஐ வழக்குப் பதிவு செய்தது.

இவ்வழக்கில் இருந்து தன்னை விடுவிக்கக்கோரி கணேஷ் அகர்வாலும், இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி நரேஷ் பிரசாத் அகர்வாலும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் மீதான விசாரணை நீதிபதி எம். நிர்மல்குமார் முன்பாக நடந்தது. அப்போது, இந்த வழக்குகளில் மனுதாரர்களுக்கு சாதகமான தீர்ப்பை பெற, நீதிபதிக்கு கொடுக்க வேண்டுமெனக்கூறி ரூ.50 லட்சத்தை பெற்றுள்ளதாக, இந்த வழக்கில் ஆஜராகும் மூத்த வழக்கறிஞரான முரளிகுமரன் மீது குற்றம்சாட்டி நீதிக்கான அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில், தங்களுக்கு புகார் மனு வந்துள்ளதாகக் கூறி, அதன் நகலுடன் மத்திய சட் டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்தில் இருந்து சென்னை உயர் நீதிமன்ற பதிவாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாக, நீதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

அதையடுத்து, நீதிபதி சம்பந் தப்பட்ட மூத்த வழக்கறிஞரை அழைத்து இதுதொடர்பாக விசாரித்தார். அப்போது, இந்தச் குற்றச்சாட்டுகளை பகிரங்க மாக மறுத்த மூத்த வழக்கறிஞர் முரளிகுமரன், இதுதொடர்பாக தனக்கு எதிரான எந்த விசாரணையையும் எதிர்கொள்ள தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அப்போது, சிபிஐ தரப்பில் ஆஜரான சிறப்பு வழக்கறிஞர் கே.சீனிவாசன், நீதித் துறையின் கண்ணியத்துக்கு ஊறுவிளைவிக்கும் இது போன்ற கடிதத்தை புறம் தள்ள வேண்டும் என்றும், மூத்த வழக் கறிஞர் மீது குற்றம்சாட்டி மனு அனுப்பிய நபரை கண் டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோரினார்.

அதையடுத்து நீதிபதி, இதுதொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற ஊழல் தடுப்பு பதிவாளர் விசாரணை நடத்த உத்தரவிட்டு, இந்த வழக்கு விசாரணையில் இருந்து தான் விலகிக் கொள்வதாகவும், இந்த வழக்கை வேறு ஒரு நீதிபதி விசாரிக்கும் வகையில் தலைமை நீதிபதிக்கு பரிந்துரைத்தும் உத் தரவிட்டுள்ளார்.

# கோடை காலத்தில் தடையில்லா மின்சாரம்: உள்கட்டமைப்பை மேம்படுத்தும் மின்வாரியம்

**சென்னை, பிப்.16:** சென்னையில் கோடை காலத்தில் தடையில்லா மின்சாரத்தை வழங்கவும், மின்வெட்டை தடுக்கும் நோக்கிலும் பல்வேறு உள்கட்டமைப்புப் பணிகளை மின்வாரியம் மேற்கொண்டு வருகிறது.

சென்னையின் தினசரி மின்தேவை 3,300 மெகாவாட்டாக இருந்து வருகிறது. கோடைகாலங்களில் (ஏப்ரல் முதல் ஜூன் வரை) இந்த மின்தேவை 4,800 முதல் 5,000 மெகாவாட்டாக அதிகரிக்கும். இந்த நிலையில், சென்னை மாநகா மற்றும் புறநகா பகுதிகளில் தடையில்லா மின்சாரம் வழங்கும் நோக்கில், சென்னைக்குள்பட்ட பகுதிகளில் பல புதிய துணை மின்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், பல துணை மின் நிலையங்களில் மின்மாற்றிகளின் திறனை அதிகரிப்பது உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பணியை மின்வாரியம் மேற்கொண்டு வருகிறது.

இதுகுறித்து மின்பகிர்மானக் கழக அதிகாரிகள் சிலா கூறியதாவது:

சென்னையில் அண்ணா சாலை உள்ளிட்ட அதிக வா்த்தகம் நடைபெறும் பகுதிகளிலும், தொழில் நிறுவனங்கள் நிறைந்த மணலி, மீஞ்சூா், கொளத்தூா், அம்பத்தூா, ஆவடி உள்ளிட்ட பகுதிகளிலும் மின்தேவை அதிகரித்து வருகிறது. இந்தத் தேவையைக்கருத்தில்கொண்டு, கூடுதல் மின்சாரத்தைக் கையாளும் திறன்கொண்ட 7 புதிய துணை மின்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே இருக்கும் துணை மின் நிலையங்களில் கூடுதல் மின்சாரத்தைக் கையாறும் திறன்கொண்ட 19 புதிய மின்மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், மயிலாப்பூரில் உள்ள முண்டகன்னி அம்மன், கொளத்தூரில் உள்ள கணேஷ் நகா் மற்றும் ஆவடி அருகேயுள்ள பருத்திப்பட்டில் தலா 2 புதிய துணை மின்நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.

கணேஷ் நகா், மாத்தூா், எண்ணூா், மாதவரம், கொடுங்கையூா், அத்திப்பட்டு, அலமதி ஆகிய பகுதிகளிலும், புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுமட்டுமின்றி சென்னை வடக்கு பகுதியில் குறைந்த மின்னழுத்தப் பிரச்னைகள் உள்ள பகுதிகளைக் கண்டறிந்து, இதைச் சரிசெய்ய 1,360 விநியோக மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 868 கி.மீ. நீளத்துக்கு உயா அழுத்தக் புதைவட கம்பிகளுக்கும், 596 கி.மீ. நீளத்துக்கு தாழ்வழுத்த புதைவட கம்பிகளுக்கும் நிலத்தில் பதிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

5,000-க்கும் மேற்பட்ட பழைய மற்றும் சேதமடைந்த மின் கம்பங்கள் மாற்றப்பட்டதுடன், 445 கி.மீ. நீளத்துக்கு சேதமடைந்த மின் கடத்திகளும் மாற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் கோடைகாலத்தில் தடையில்லா மின்சாரத்தை வழங்க முடியும் என்றனா.

# சென்னை, புறநகர் பகுதிகளில் வழக்கத்தைவிட அதிக பனிப்பொழிவு - வாகன ஓட்டிகள் அவதி!



**சென்னை, பிப்.16:** சென்னை மற்றும் புறநகர் சுற்றுவட்டார பகுதிகளில் இன்று (பிப். 15) காலை வழக்கத்தைவிட பனிப்பொழிவு அதிகரித்திருந்தது.

பொதுவாக தமிழகத்தில் பனிக்காலம் என்பது வடகிழக்குப் பருவமழை முடிந்த பிறகு, டிசம்பா மாத இறுதியில் தொடங்கி ஜனவரி முழுவதும் மாா்கழி இறுதி வரை நீடிக்கும். மாாகழி மாதத்தில் பனிப்பொழிவு அதிகமாகவும், அதன்பின் படிப்படியாகக் குறைந்தும் காணப்படும்.

தை மாதம் பிறந்துவிட்டால் வெயிலின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கும். ஆனால், நிகழாண்டில் ஜனவரி 20ஆம் தேதியைக் கடந்தும் மாாகழி முடிந்து தை பிறந்தும், பனிப்பொழிவும் குளிரும் நீடித்து வருகிறது.

இந்த நிலையில், இன்று சென்னை, திருவள்ளூா், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் மிதமான பனிப்பொழிவு இருக்கும் என வானிலை மையம் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் மேற்கண்ட பகுதிகளில் அதிகாலை முதலே பனிப்பொழிவு அதிகரித்திருந்ததைக் காண முடிந்தது. புகை மண்டலம் போலக் காட்சியளித்த பனிப்பொழிவு மற்றும் கடும் குளிா் காரணமாக காலை வேளையில் வாகனங்களை இயக்க முடியாமல் வாகன ஓட்டிகள் முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டபடியே சென்றனா.

பிப்.16-இல் சென்னை, திருவள்ளூா, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூா மாவட்டங்களிலும் மிதமான பனிப்பொழிவு இருக்கும் என வானிலை மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் இன்று (16.02.2026) மின்தடை ஏற்படும் இடங்கள்...

**சென்னை, பிப்.16:** சென்னையில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது. காலை 9 மணி முதல் பிற்பகல் 2 வரை மின் தடை செய்யப்படும். பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.



அந்த வகையில், நாளை மின் தடை ஏற்படும் பகுதிகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, சென்னையில் நாளை (16.02.2026) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். அதன்படி,

ராமாபுரம்: மங்களா நகர், அம்பாள் நகர், போரூர், மவுண்ட் பூந்தமல்லி ரோடு, ஆர்.இ.நகர், வன்னியர் தெரு.

அம்பத்தூர்: மணலோடை தெரு, பத்மா சீனிவாச நகர், சரஸ்வதி நகர், லெனின் நகர், ஏரிக்கரை சாலை, வெங்கடேஸ்வரா நகர்.

வியாசர்பாடி: இஎச் சாலை, பிவி காலனி, சாஸ்திரி நகர், இந்திரா நகர் விரிவாக்கம், வியாசர்பாடி தொழிற்பேட்டை, காந்தி நகர், ஸ்டீபன் சாலை, வியாசர் நகர், புதுநகர் முக்கிய தெருக்களில் எம்பிஎம் தெரு, மார்க்கெட் தெரு, சென்ட்ரல் கிராஸ் தெரு 10 முதல் 19 வரை, கிழக்கு குறுக்குத் தெரு 10 முதல் 19 வரை, எம்கேபி நகர் 1 முதல் 8வது மெயின் ரோடு, எம்கேபி நகர், கல்யாண்புரம், சத்தியமூர்த்தி நகர் 1 முதல் 25வது தெரு, சாமியார்தோட்டம் 1 முதல் 4வது தெரு, பல்லையா தெரு 1 முதல் 4வது தெரு வரை, உதய சூரியன் நகர், எஸ்.ஏ. காலனி, சர்மா நகர்.

# வீட்டுக்குள் கணக்கெடுப்பு நடத்த வந்தது போல் புகுந்து பெண்ணை கத்தியால் குத்தி நகை பறிக்க முயற்சி: இளம்பெண் கைது

**திருவள்ளூர், பிப்.16:** திருவள்ளூா அருகே கணக்கெடுப்பு நடத்த வந்தது போல் வீட்டுக்குள் புகுந்து திடீரென பெண்ணை கத்தியால் குத்தி நகையைப் பறிக்க முயன்ற இளம் பெண்ணை போலீஸாா கைது செய்தனா.


திருவள்ளூா் அடுத்த புட்லூாரைச் சோந்தவா ஷியமாலா (55). இவா சனிக்கிழமை பிற்பகலில் வீட்டில் தனியாக இருந்தபோது, அதே பகுதியைச் சோ்ந்த பவித்ரா (28) என்பவா அப்பகுதியில் கணக்கெடுப்பு நடத்த வந்ததாகக் கூறி பேசிக் கொண்டிருந்தாராம்.

அப்போது, பவித்ரா தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் திடீரென ஷியமாலாவின் கழுத்து மற்றும் கை பகுதிகளில் சரமாரியாக குத்திவிட்டு, கழுத்தில் கிடந்த நகையைப் பறிக்க முயன்றாராம்.

அப்போது, ஷியமாலா காயங்களுடன் பவித்ராவை தள்ளிவிட்டு வீட்டின் கதவை வெளிப்பக்கமாக பூட்டிவிட்டு சப்தம் போட்டு பக்கத்தில் உள்ளவா்களை அழைத்துள்ளாா. இதையடுத்து அருகில் இருந்தவாகள் ஓடிவந்து செவ்வாப்பேட்டை காவல் நிலைய போலீஸாருக்கு தகவல் அளித்தனா.

அதன்பேரில், அங்கு வந்த போலீஸாா் கழுத்தில் காயமடைந்த ஷியமாலாவை மீட்டு, திருவள்ளூா் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனா். அதைத் தொடா்ந்து, போலீஸாா தீவிர விசாரணைக்கு பின் பவித்ரா மீது வழக்குப் பதிந்து கைது செய்து சிறையில் அடைத்தனா.

## பார்த்தசாரதி பெருமாள் புறப்பாடு



பார்த்தசாரதி பெருமாள் புறப்பாடு ஆரம்பம். ஈக்காட்டு தாங்கலுக்கு விஜயம்

## 108 சிவலிங்கம் பூஜை சிறப்பு வழிபாடு



**பொள்ளாச்சி பிப்.16:** கன்னிகா பரமேஸ்வரி ஆலயம் மற்றும் TNSKPDF ன் யுக சக்தி குழு வழங்கும் மகா சிவராத்திரி, சனி மகா பிரதோஷத்தை முன்னிட்டு தலைமை திரு. T.சேதுபதி அவர்கள் மாநிலத் தலைவர் TNSKPDF, முன்னிலை திருமதி R. சுப்புலட்சுமி அவர்கள் TNSKPDF யுக சக்தி பெண்கள் குழுத்தலைவி மற்றும் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தவர்கள்:

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் அவர்கள் ஆசியுடன் பேரூர் ஆதீனம், தவத்திரு மருதாசல அடிகளார் அவர்கள் பேரூர் ஆதீனம் பூஜையை துவக்கி வைத்தார்.

மதியம் 2 மணி முதல் மாலை 8 மணி வரை சிரவை சிவத்திரு மதிராஜா மற்றும் சௌரிபாளையம் சிவவை கார்த்திக் அவர்கள் பன்னிரு திருமுறை பாராயணம் முற்றோதல் மற்றும் மாலை 6:00 மணிக்கு பக்தர்கள் அவர்கள் கைப்பட சிவ பெருமானின் திருமேனிக்கு அபிஷேகங்கள், வில்வத்தினால் அர்ச்சனைகள், வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, சங்குகள் முழங்க, பெண்கள் அனைவரும் ஆரத்திகள் காண்பித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகாதீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் கலந்து கொண்டு வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனையும், 108 சிவலிங்கா பூஜையில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர் . பெண்கள் யுக சக்தி குழுவினரால் வெகு சிறப்பாக பூஜைகள் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

## விழிப்புணர்வு பிரச்சாரம்





கலசபாக்கம் ஒன்றியம் அணையாலை,காம்பட்டு ஆகிய ஊராட்சிகளில் வீடு வீடாக நேரடியாக சென்று போளூர் சட்டமன்ற உறுப்பினர் அக்ரி S.S.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 'விடியா ஆட்சி உங்கள் வீட்டு BILL -லே சாட்சி 'என்ற விழிப்புணர்வு பிரச்சாரம் அடங்கிய பிரசுரங்களை வழங்கினார். உடன் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

## திருச்சியில் "அறம் பேசுவோம்" மாபெரும் பேச்சுப்போட்டி:





**திருச்சி, பிப். 16:** திருச்சியில் இன் மீடியா (IN Media), ஓ.ஒய் டிவி (OY TV) மற்றும் அமேஸ் ஐஏஎஸ் அகாடமி இணைந்து நடத்திய "அறம் பேசுவோம் - சீசன் 4" மாபெரும்பேச்சுப்போட்டியின் இறுதிச்சுற்று மற்றும் பரிசளிப்பு விழா இன்று திருச்சிராப்பள்ளி புனித வளனார் கல்லூரி ஜிம் அரங்கத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.மாணவ-மாணவியர்கள் இளைஞர்கள் பெரியவர்கள் உட்பட 60 வயது வரை உள்ளவர்களுக்கு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன.

இப்போட்டியானது "நான் முதல்வர் ஆனால்..." என்ற தலைப்பில் நடைபெற்றது. இதில் பங்கேற்றவர்கள் வயது அடிப்படையில் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர்: 18 வயதுக்கு உட்பட்டோர் பிரிவு 18 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவு பரிசளிப்பு விழா: ஒவ்வொரு பிரிவிலும் மிகச்சிறப்பாகப் பேசியவர்களுக்கு முதல் மூன்று இடங்களுக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. இது தவிர, நடுவர்களின் கவனத்தை ஈர்த்த மற்ற திறமையான பேச்சாளர்களுக்கு சிறப்புப் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. முக்கியப் பங்கேற்பாளர்கள்:

திருச்சி செயின்ட் ஜோசப் மேலாண்மை நிறுவன (JIM) இயக்குநர் டாக்டர் பால் ராஜ் SJ விழாவிற்குத் தலைமை தாங்கினார். அமேஸ் ஐஏஎஸ் அகாடமி இயக்குநர் ரெவ. ஃபாதர் தஞ்சை டோமி, புனித மரியன்னை பேராலயப் பங்குத்தந்தை ரெவ. ஃபாதர் சவரிமுத்து, லால்குடி நெஸ்ட் பள்ளி தாளாளர் ஃபாதர் மரிய விக்டர் மற்றும் திரைப்பட இயக்குநர் திரு. ஜே. புருனோ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்குப் பரிசுகளை வழங்கினர்.

முனைவர் ராஜாத்தி மற்றும் முனைவர் சீனிவாசன் ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றி வெற்றியாளர்களைத் தேர்வு செய்தனர். தமிழகத்தின் சிறந்த பேச்சாளர்களைக் கண்டறியவும், இளைஞர்களிடையே சமூகப் பொறுப்புணர்வுடன் கூடிய பேச்சுத் திறமையை வளர்க்கவும் இந்த "அறம் பேசுவோம்" நிகழ்ச்சி நடத்தப்பட்டதாக ஓ.ஒய் டிவி நிர்வாகியும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருமான திருஆனந்த் தெரிவித்தார். நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

## அரசியல் கார்னர்

### எங்கள் பலம் இல்லாமல் நீங்கள் அரியணையில் ஏறி இருக்க முடியாது - திமுகவை விமர்சித்த மாணிக்கம் தாகூர்





**மதுரை, பிப்.16:** மதுரையில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் திமுகவை கடுமையாக விமர்சித்து பேசினார்.

இந்த கூட்டத்தில் பேசிய மாணிக்கம் தாகூர், "எங்கள் பலம் இல்லாமல் நீங்கள் (திமுக) அரியணையில் ஏறி இருக்க முடியாது என்பதை மறந்துவிடாதீர்கள். நீங்கள் செய்ததையும் நாங்கள் மறக்கவில்லை. தோழமையாக இருக்கும்போது நாங்கள் கேட்பது என்னவென்றால், நாங்கள் உங்களுக்கு மரியாதை கொடுக்கிறோம். நீங்களும் எங்களுக்கு அதே மரியாதையை கொடுக்க வேண்டும் என்பதுதான்

நீங்கள் செய்த பல தவறுகளுக்காக பழியை சுமந்தவர்கள் நாங்கள். எங்களுக்கு மரியாதை கொடுக்கவில்லையென்றால் திருப்பி அடிப்போம்

உண்மையாக பாஜகவை எதிர்க்கக்கூடிய தைரியமும் தில்லும் காங்கிரஸாருக்கு மட்டும்தான் இருக்கிறது.

மோடி அரசு ராகுல்காந்தியை பேசவிடாமல் தடுத்த விவகாரத்தில் சஸ்பெண்ட் ஆனது 8 பேர். அதில் 7 பேர் காங்கிரஸ். ஒரு ஆள் சிபிஎம்

பாராளுமன்றத்தில் யார் பலமாக சண்டையிடுகிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

துணை நிற்கிறோம்.. துணை நிற்கிறோம் என்றவர்கள் ஏன் சஸ்பெண்ட் ஆகாமல் இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.சைடு வாங்கிட்டுபோய் வணக்கம் சொல்லக்கூடிய பழக்கம் காங்கிரஸ்காரனுக்கு கிடையவே கிடையாது" என்று தெரிவித்தார்.

### வருகிற 24-ந்தேதி ஜெயலலிதா பிறந்தநாளில் புதிய கட்சி தொடங்குகிறார் சசிகலா



**மதுரை, பிப்.16:** தமிழகத்தில் இன்னும் 2 மாதங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதையடுத்து அனைத்து கட்சிகளும் சட்டசபை தேர்தலை சந்திப்பதற்கான பணிகளை தீவிரப்படுத்தி உள்ளன.

தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகள், அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள், விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் மற்றும் சீமானின் நாம் தமிழர் கட்சி ஆகிய கட்சிகள் தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றன.

தே.மு.தி.க. மற்றும் ராமதாஸ் தலைமையிலான பா.ம.க. ஆகியவை இன்னும் கூட்டணி முடிவுகளை அறிவிக்காமல் மவுனம் காட்டி வருகின்றன.

இந்த நிலையில் சசிகலாவும் புதிய கட்சி தொடங்கி சட்டசபை தேர்தலில் குதிக்க முடிவு செய்துள்ளார். சசிகலா சமீபத்தில் தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

கடந்த 3-ந்தேதி அண்ணா நினைவு நாளில் மெரினாவில் உள்ள அண்ணா நினைவிடத்தில் மரியாதை செலுத்திய சசிகலா நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில், 'எதிரிகள் யார்? துரோகிகள் யார் என்பது தமிழக மக்களுக்கு தெரியும். இதுபற்றி நான் தெளிவாக சொல்ல வேண்டியதில்லை. வருகிற சட்டமன்ற தேர்தலில் நிச்சயம் அம்மா ஆட்சி அமைப்போம். வருகிற சட்டசபை தேர்தலில் எனது ஆதரவாளர்கள் களமிறக்கப்படுவார்கள்' என்று கூறினார்.

அதன் தொடர்ச்சியாக கடந்த 6-ந்தேதி போயஸ் கார்டனில் உள்ள தனது வீட்டில் ஆதரவாளர்களுடன் புதிய கட்சி தொடங்குவது தொடர்பாக ஆலோசனை நடத்தினார்.

இதையடுத்தே அவர் புதிய கட்சி தொடங்க திட்டமிட்டு உள்ளார். இதனை உறுதிப்படுத்தும் விதமாக சசிகலா உசிலம்பட்டி தொகுதியில் போட்டியிட வேண்டும் என அவரது ஆதரவாளர்கள் சமீபத்தில் உசிலம்பட்டி பகுதிகளில் போஸ்டர் ஒட்டினார்கள். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், வருகிற 24-ந்தேதி ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் சசிகலா பிரமாண்ட பொதுக்கூட்டம் நடத்த ஏற்பாடு செய்துள்ளார்.

இந்த பொதுக்கூட்டத்திற்கான முகூர்த்த கால் நடும் பணி இன்று காலை பசும்பொன்னில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சசிகலாவின் ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஜெயலலிதாவின் பிறந்த நாளில் நடைபெற உள்ள இந்த பொதுக்கூட்டத்தில் சசிகலா புதிய கட்சி தொடங்குகிறார். அந்த பொதுக்கூட்டத்தில் கட்சியின் பெயரையும் சசிகலா அறிவிக்க உள்ளார். மேலும் கட்சியின் கொடியையும் அறிமுகப்படுத்த உள்ளார்.

தமிழக அரசியலில் தன்னை மீண்டும் நிலை நிறுத்த சசிகலா தனிக்கட்சி தொடங்க எடுத்து வரும் முயற்சிகளால் தமிழக அரசியல் களம் மேலும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் மாசித்திருவிழா 21-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது

**திருச்செந்தூர், பிப்.16:** முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெறும் பல்வேறு திருவிழாக்களில் முக்கிய திருவிழாவான மாசித் திருவிழா வருகிற 21-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. அன்று காலை 5 மணிக்கு கொடியேற்றம் நடக்கிறது.

மாலை 4.30 மணிக்கு மேல் அப்பர் சுவாமிகள் தங்க சப்பரத்தில் எழுந்தருளி வீதிகளில் உழவாரப்பணி செய்து கோவில் சேர்தல் நடக்கிறது. இரவு 7 மணிக்கு மேல் ஸ்ரீ பெலிநாயகர் அஸ்திர தேவருடன் தந்த பல்லக்கில் கோவிலில் இருந்து புறப்பட்டு 9 சந்திகளிலும் உலா வந்து கோவில் சேர்தல் நடக்கிறது.

2-ம் நாள் (22-ந் தேதி) காலை 10.30 மணிக்கு மேல் சுவாமி குமர விடங்க பெருமான் சிங்க கேடய சப்பரத்திலும், தெய்வானை அம்மன் சிறிய பல்லக்கிலும் எழுந்தருளி தூண்டுகை விநாயகர் கோவிலுக்கு வடபுறம் உள்ள ஆண்டியப்பபிள்ளை மண்டபம் வந்து சேர்தல். அம்பாள் மட்டும் உள் திருவீதி 4 வெளி திருவீதி நான்கு ஆக 8 வீதிகளிலும் உலா வந்து மண்டகப்படி சேர்தல் நடக்கிறது.

இரவு 7 மணிக்கு மேற்படி மண்டபத்தில் இருந்து சுவாமி குமரவிடங்க பெருமான் சிங்க கேடய சப்பரத்திலும் அம்பாள் பெரிய கேடய சப்பரத்திலும் எழுந்தருளி பரிவார மூர்த்திகளுடன் எட்டு திருவீதிகளிலும் உலா வந்து மேல கோவில் சேர்தல் நடக்கிறது.

3-ம் நாள் திருவிழா 23-ந்தேதி (திங்கட்கிழமை )காலை 7 மணிக்கு மேல் சுவாமி மேலகோவிலில் இருந்து பூங்கேடய சப்பரத்திலும், அம்மன் கேடய சப்பரத்திலும் எழுந்தருளி 8 வீதிகளில் உலா வந்து மேல கோவில் சேர்தல் நடக்கிறது.

மாலை 6.30 மணிக்கு மேல் சுவாமி தங்கமுத்து கிடா வாகனத்திலும் அம்மன் வெள்ளி அன்னவாகனத்திலும் எழுந்தருளி எட்டு வீதிகளிலும் உலா வந்து மேல கோவில் சேர்தல் நடக்கிறது.

4-ம் திருவிழாவான 24-ந்தேதி மாலை 6.30 மணிக்கு மேல் சுவாமி வெள்ளி யானை வாகனத்திலும் அம்மன் வெள்ளி சரப வாகனத்திலும் எழுந்தருளி வீதி உலா வந்து மேல கோவில் சேர்ந்தல் நடக்கிறது.

5-ம் திருவிழாவான 25-ந் தேதி (புதன்கிழமை) இரவு 7.30 மணி அளவில் குடைவரை வாயில் தீபாராதனையாகி சுவாமி, அம்பாள் தங்கமயில் வாகனத்திலும் எழுந்தருளி 8 வீதிகளில் உலா வந்து கோவில் சேர்தல் நடக்கிறது.

6-ம் நாள் திருவிழா 26-ந் தேதி (வியாழக்கிழமை )காலை 7 மணிக்கு சுவாமி கோ. ரதத்தில் எழுந்தருளி 8 வீதிகளும் உலா வந்து பந்தல் மண்டபம் சேர்தல் நடக்கிறது. இரவு 8 மணிக்கு சுவாமி வெள்ளி தேரிலும், அம்மன் இந்திர விமானத்திலும் எழுந்தருளி 8 வீதிகளும் உலா வந்து மேலக்கோவில் சேர்தல் நடக்கிறது.

7-ம் நாள் திருவிழாவான 27-ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 5 மணிக்கு மேல் 5.30 மணிக்குள் சண்முகப் பெருமான் உருகு சட்ட சேவை நடக்கிறது.

காலை 9 மணிக்கு சுவாமி சண்முகர் சண்முக விலாசத்தில் இருந்து வெற்றிவேர் சப்பரத்தில் ஏற்றத்தில் எழுந்தருளி பிள்ளையின் கட்டளை மண்டபம் சேர்தல் அங்கு அபிஷேகம் அலங்காரம் தீபாரதனை நடக்கிறது. மாலை 4.30 மணிக்கு மேல் அங்கிருந்து சுவாமி சிவப்பு சாத்தி கோலத்தில் எழுந்தருளி 8 வீதிகளிலும் உலா வந்து மேல கோவில் சேர்தல் நடக்கிறது.

8-ம் திருவிழாவான 28-ந் தேதி (சனிக்கிழமை)காலை 6 மணிக்கு பிரம்மன் அம்சமாக வெள்ளை சாத்தி கோலத்தில் சுவாமி சண்முகர் எழுந்தருளி 8 வீதிகளிலும் உலா வந்து கோவில் சேர்தல் நடக்கிறது.

காலை 10.30 மணிக்கு மேல் சுவாமி சண்முகர் விஷ்ணு அம்சமாக பச்சை சாத்தி கோலத்தில் எழுந்தருளி 8 வீதிகளிலும் உலா வந்து மேல கோவில் சேர்தல் நடக்கிறது.

9-ம் திருவிழாவான மார்ச்-1-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 7 மணிக்கு மேல் சுவாமி அம்பாள் பல்லக்கில் எழுந்தருளி 8 வீதிகளிலும் உலா வந்து கோவில் சேர்தல் நடக்கிறது .

இரவு 8 மணிக்கு சுவாமி தங்க கயிலாய பர்வத வாகனத்திலும் அம்மன் வெள்ளி கமல வாகனத்திலும் எழுந்தருளி 8 வீதிகளிலும் உலா வந்து கோவில் சேர்தல் நடக்கிறது இரவு 10 மணிக்கு தேர் கடாட்சம் நடக்கிறது.

விழாவின் சிகர நிகழ்ச்சியான 10-ம் திருவிழா தேரோட்டம் அடுத்த மாதம் (மார்ச்) 2-ந் தேதி (திங்கள்கிழமை) காலை 7 மணிக்கு மேல் 7.30 மணிக்கு மீன லக்னத்தில் நடக்கிறது

11-ம் திருவிழாவான 3-ந் தேதி ( செவ்வாய்க்கிழமை) இரவு 7 மணிக்கு மேல் சுவாமி அம்மன் புஷ்ப சப்பரங்களில் எழுந்தருளி தெப்பக்குளம் மண்டகப்படி சேர்தல், அங்கு இரவு 10.30 மணிக்கு மேல் அபிஷேகம் அலங்காரமாகி சுவாமி தெப்பத்தில் 11 சுற்றுகள் சுற்றி வந்து மேலக்கோவில் சேர்தல் நடக்கிறது. 12-ம் திருவிழாவான 4-ந்தேதி (புதன்கிழமை) மாலை 4 மணிக்கு மஞ்சள் நீராட்டு திருக்கோலத்துடன் 8 வீதிகளிலும் வலம் வந்து 14 செங்குந்தர் முதலியார் திருமண மண்டபம் வந்து அங்கு அபிஷேகம் அலங்காரமாகி தீபாரதனைக்கு பின் இரவு 9 மணிக்கு அம்மன் மலர் கேடய சப்பரத்தில் எழுந்தருளி வீதியுலா வந்து கோவில் சேர்தல் நடந்து விழா நிறைவு பெறுகிறது.

விழாவுக்கான ஏற்பாடுகளை கோவில் தக்கார் அருள் முருகன், இணை ஆணையர் ராமு மற்றும் கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com